REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஓகஸ்ட் 15 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 194 | Thursday 15, August, 2024 | 20பக்கங்கள் | 50/-




## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் புதிய கூட்டணி

### பொதுஜன ஐக்கிய முன்னணி அரசியல் கட்சி உதயம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பல கட்சிகளுடன் இணைந்து பொதுஜன ஐக்கிய முன்னணி என்ற பெயரில் கூட்டணியை உருவாக்கியுள்ளது.

பத்தரமுல்லையிலுள்ள வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற இதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது. கூட்டணியின் தலைவராக முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுர பிரியதர்ஷன யாப்பா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் முற்போக்கு இடதுசாரி அரசியல் கட்சிகள் சிலவற்றை ஒன்றிணைத்து, பொது ஜன ஐக்கிய முன்னணி கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது. இக்கூட்டணி 21 பேர் அடங்கிய தலைமைத்துவ

06



03 தாய்லாந்து பிரதமர் அதிரடி பதவி நீக்கம்

அரசியலமைப்பை மீறியதாக குற்றச்சாட்டு

# தனிநபர் வருமான வரிக்கு விரைவில் நிவாரணம்

தனிநபர் வருமான வரிக்கு விரைவில் நிவாரணம் வழங்க எதிர்பார்ப்பதாகவும், இதற்காக சர்வதேச நாணய நிதியம் மற்றும் திறைசேரி ஆகியவை ஏற்கனவே சமர்ப்பித்துள்ள இரண்டு முன்மொழிவுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

திறைசேரி சமர்ப்பித்த பரிந்துரையையும் சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த மாற்றுப் பரிந்துரையையும் பரிசீலித்து வருவதாக தெரிவித்த ஜனாதிபதி, வரி எல்லையை விரிவுபடுத்துவதற்கும் சர்வதேச நாணய நிதியம் முன்வைத்திருக்கும் பரிந்துரைகள் அறிஞர்கள், நடுத்தர வர்க்க சமூகத்துக்கும் நன்மை பயப்பதாக அமையும் என்பதால் அது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். அத்தோடு பொருளாதாரத்தை மீட்டெடுக்கும்

06



**இதற்கென IMF மற்றும் திறைசேரிக்கு சமர்ப்பித்த 02 முன்மொழிவுகள் தொடர்பில் அரசு கவனம்**

**நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்காக சர்வதேச சமூகத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களை மீற முடியாது**

**பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடனான மாநாட்டில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு**

## வேட்புமனுவில் கையெழுத்திட்டார் ஜனாதிபதி



## நாமல் ராஜபக்ஷ வேட்புமனுவில் கைச்சாத்து



ஜனாதிபதி தேர்தல் வேட்புமனுத் தாக்கல்:

## தேர்தல் செயலகம் உள்ளிட்ட பகுதிகள் விசேட பாதுகாப்பு வலயமாக அறிவிப்பு

### விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் முன்னெடுப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் இராஜகிரியிலுள்ள தேர்தல் செயலகத்தில் இன்று காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை நடைபெறவுள்ளது. இதனால், அப்பகுதிகளில் விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கிணங்க இன்று காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை இராஜகிரிய தேர்தல் செயலகம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில், விசேட போக்குவரத்துத் திட்டம்

06

## மன்னார் மருதமடு அன்னையின் ஆவணி மாத திருவிழா இன்று



மன்னார், மருதமடு அன்னையின் ஆவணி மாத திருவிழா இன்று (15) நடைபெறுகிறது. இதில், பங்கேற்கும் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு, சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளதாக மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மடு அன்னையின் ஆவணி மாத திருவிழா

06

## பங்களாதேஷ் பிரதமருக்கு ஜனாதிபதி ரணில் வாழ்த்து



பங்களாதேஷின் புதிய பிரதமர் முஹம்மத் யூனுஸுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பங்களாதேஷின் புதிய பிரதமரை தொலைபேசியில் அழைத்து தனது வாழ்த்துகளை

06



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை எதிர்வரும் தேர்தலில் தேசிய காங்கிரஸ் ஆதரிக்கவுள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று ஜனாதிபதியுடன் செய்துகொள்ளப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம்.

## ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் இன்று

### செப்டெம்பர் 4,5,6 இல், தபால் மூல வாக்களிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று இடம் பெறவுள்ளது. இன்றைய தினம் (15) காலை 9.00 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரை வேட்பு மனுத் தாக்கல் இடம் பெறுவதுடன் 11 மணி முதல் 11.30 மணிவரை ஆட்சேபனைகளை

06

## அரச ஊழியரின் சம்பள அதிகரிப்பு அரசியல் நோக்கம் எதுவும் இல்லை

### நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கைப்படியே நடவடிக்கை



அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு பிரேரணையில் எவ்வித அரசியல் நோக்கமும் இல்லை என்றும், மக்களுக்கு அதிகபட்ச நிவாரணங்களை வழங்க அரசாங்கம் முடிந்தவரை செயற்படுவதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்:

முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர். செனவிரத்ன தலைமையிலான நிபுணர் குழு வழங்கிய பரிந்துரைகள் மற்றும் தீர்மானங்களின் பிரகாரம் இந்த முன்மொழிவை அமைச்சரவை அங்கீகரித்தது. தற்போதுள்ள வாழ்க்கை நிலைமைகள், பொருளாதார

06

## சம்பள அதிகரிப்பு ரூபா 1700 வர்த்தமானி நேற்று வெளியீடு

### ஆட்சேபனை தெரிவிக்க 28 வரை அவகாசம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**




மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தை 1700 ரூபாவாக அதிகரிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டது. தொழில் அமைச்சின் கீழ் செயற்படும் சம்பள நிர்ணய சபையின் தலைவர் எச்.கே.கே.ஏ. ஜயசுந்தரவின் கையொப்பத்துடன் நேற்றைய தினம் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர் ஒருவரின் நாளாந்த

06

வேட்பாளரிடம் ரூ. 03 கோடி இலஞ்சம் கோரிய

## எக்ஸத் லங்கா பொதுஜன கட்சி செயலாளர் கைது

எக்ஸத் லங்கா பொதுஜன கட்சியின் செயலாளர் உள்ளிட்ட பிரதிநிதிகள் நேற்று இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

30 மில்லியன் ரூபாவை இலஞ்சமாக கோரியுள்ள விவகாரத்திலேயே இவர்கள் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும் மேற்படி

06

## தேர்தலில் யாரை ஆதரிப்பது இதுவரை தீர்மானம் இல்லை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

**செப்டம்பர் 20 இல், அறிவித்தாலும் போதும் – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி, எம்.ஏ. சுமந்திரன்**

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற தீர்மானம் இதுவரை மேற்கொள்ளப்படவில்லையென, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்

06

## இரண்டாம் தவணை பாடசாலை விடுமுறை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இரண்டாம் தவணை பாடசாலை விடுமுறை மற்றும் மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகள் தொடர்பாக கல்வியமைச்சு விசேட அறிவிப்பை விடுத்துள்ளது.

2024 ஆண்டுக்கான தமிழ், சிங்கள மொழி அரசாங்க பாடசாலைகள் மற்றும் அரச அனுசரணை

06

## நாட்டிலிருந்து கடத்தப்பட்ட தங்கம் சிவகங்கையில் பறிமுதல்

### வாகனத்துடன் 02 இந்தியர்கள் கைது

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



இலங்கையிலிருந்து கடத்தி வரப்பட்ட 6.6 கிலோ தங்கம் சிவகங்கையில் பறிமுதல் செய்யப்பட்டது. இதன்போது இருவர் கைதாகினர். நாட்டுப்படகுகளை பயன்படுத்தி இராமநாதபுரம் மாவட்டம் வழியாக தங்கக் கட்டிகள் கடத்தி வரப்படுவதாக மதுரை வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்துள்ளது.

06

# நாகப்பட்டினம் – காங்கேசன்துறை கப்பல் சேவை பயண கட்டணம் நிர்ணயம்

(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)



தமிழகத்தின் நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து காங்கேசன்துறைக்கு கப்பல் சேவை ஆரம்பமாகவுள்ளது. இதில் பயணிகளுக்கான கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்திய நாணயத்தில் ரூ. 5 ஆயிரம் கட்டணம் என இது நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக இந்த்ஸ்ரீ கப்பல் நிறுவனம் மேலும் அறிவித்துள்ளது.

நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு இயக்கப்படவுள்ள சிவகங்கை கப்பல் இந்த்ஸ்ரீ நிறுவனத்துக்கு சொந்தமானது.

அந்நிறுவனத்தின் அதிகாரிகள் நடாத்திய ஊடகசந்திப்பிலேயே இவ்வாறு அறிவித்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து காங்கேசன்துறைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை நாளை (16) ஆரம்பிக்கப்படவுள்ளது. சிவகங்கை என்ற பெயரில் புதிய பயணிகள் கப்பல், நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து காலை 10 மணிக்கு புறப்பட்டு, காங்கேசன் துறைக்கு பிற்பகல் 2 மணிக்கு சென்றடையும்.

தொடர்ந்து கப்பல் அங்கேயே நிறுத்தி வைக்கப்பட்டு 17 ஆம் திகதி காலை 10 மணிக்கு புறப்பட்டு பிற்பகல் 2 மணிக்கு நாகப்பட்டினம் துறைமுகத்தை வந்தடையும்.

இக் கப்பல் சேவை 18ஆம் திகதியிலிருந்து நாள்தோறும் நாகப்பட்டினத்திலிருந்து காலை 8 மணிக்கும், காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 2 மணிக்கும் கப்பல் இயக்கப்படும்.

கப்பலில் 123 சாதாரண இருக்கைகள், 27 பிரீமியம் இருக்கைகள் உள்ளன. ஜிஎஸ்டி வரியுடன் சாதாரண இருக்கைக்கு ரூ. 5,000, பிரீமியம் இருக்கைக்கு ரூ. 7,500 கட்டணம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மீண்டும் கப்பல் சேவை ஆரம்பமாகவிருப்பதால் இரு நாட்டு சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

யாழ். பொன்னாலையில்

# ஸ்ரீவரதராஜப் பெருமானின் சப்பரத் திருவிழா இன்று



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம், பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமான் தேவஸ்தானத்தின் சப்பரத்திருவிழா இன்று (15) நடைபெறவுள்ளது.

இன்று மாலை நித்திய பூஜைகளைத் தொடர்ந்து இரவு 7.00 மணிக்கு பொன்னாலை சந்திரபரத கலாலயத்தின் நூற்றுக்கும் மேற்பட்ட கலைஞர்கள் வழங்கும் கிருஷ்ணார்ப்பணம் நடன நிகழ்வு நடைபெறும்.

இரவு 9.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து எம்பெருமான் ஸ்ரீதேவி, பூதேவி சமேதராய் சகோபுர ரதத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்புரியவுள்ளார்.

# நாகர்கோவில் முருகையா ஆலய கொடியேற்றம்

(நாகர்கோவில் விஷேட நிருபர்)

நாகர்கோவில் வடக்கு அருள்மிகு முருகையா தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ பெருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை(18) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 நாட்கள் உற்சவம் நடைபெறும்.

அந்தவகையில் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவன திருவிழாவும், 28ஆம் திகதி புதன்கிழமை வசந்தோற்சவமும், 29 ஆம் திகதி வியாழக்கிழமை திருமண உற்சவமும், 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டை உற்சவமும், 31 ஆம் திகதி சனிக்கிழமை சப்பர உற்சவமும், 01 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும், 02 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்த உற்சவமும் மாலை கொடியிறக்கமும் நடைபெறும்.

# சடலத்தை அடையாளம் காண உதவுமாறு வேண்டுகோள்

(யாழ். விசேட நிருபர்)

யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்த பெண் ஒருவரின் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு வைத்தியசாலை பிரதி பணிப்பாளர் வைத்தியர் யமுனானந்தா அறிவித்துள்ளார்.

சுயநினைவற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் தொடர்பான எந்த விதமான தகவல்களும் கிடைக்காமையால் அவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

எனவே சடலத்தை அடையாளம் காண உதவுமாறு பிரதி பணிப்பாளர் கோரியுள்ளார்.

# கோப்பாய் கலாசாலையில் அனைத்துலக இளையோர் தினம் அனுஷ்டிப்பு







அனைத்துலக இளையோர் தினத்தை சிறப்பிக்கும் நிகழ்வுகள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேற்று நடைபெற்றன.

விசேடகல்வி நெறி ஆசிரிய மாணவி சாஜகான் பாத்திமா நுஸ்லா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுகளில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட உதவிப்பணிப்பாளர் விநோதினி சிறீமேனன், 'இளையோரை வழிப்படுத்துவதில் ஆசிரியர்களின் பங்களிப்பு' என்ற தொனிபொருளில் சிறப்புரை ஆற்றினார். கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளர் சின்னையா மனோகரன் அதிதி அறிமுகவுரையை ஆற்றினார்.

ஆங்கில நெறி ஆசிரிய மாணவி டேவிட் லிஜானி 'இளையோரும் சமூகமும்' என்ற தொனிப்பொருளில் மாணவர் உரையை வழங்கினார். கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவுரை ஆற்றினார். அதிதிப் பேச்சாளராகக் கலந்து கொண்ட சி. விநோதினி கலாசாலைச் சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.

வீடுகளுக்குள் புகுந்து திருட்டு

# CCTV காணொளிகளை வெளியிட்ட பொலிஸார்

(யாழ். விசேட நிருபர்)



யாழில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள வீடுகளுக்குள் புகுந்து தொடர் திருட்டுக்களில் ஈடுபட்டு வந்த நபர் தொடர்பான CCTV காணொளிகளை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தின் நல்லூர், மானிப்பாய், கோப்பாய், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் அண்மைக் காலமாக தொடர் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இத்திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவை தொடர்பில் தீவிர விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில், சில தினங்களுக்கு முன்னர் வீடொன்றில் பதிவான CCTV காணொளிகளில் நபரொருவர் திருட்டில் ஈடுபடும் காட்சிகள் பதிவாகியுள்ளன.

இதனால் குறித்த நபர் தொடர்பில் தகவல் தெரிந்தால் உடனடியாக தமக்கு அறிவிக்குமாறு கேட்டுள்ள பொலிஸார், அவ்வாறு தகவல் கொடுப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படுமெனவும் அறிவித்துள்ளனர்.

## இலங்கை துறைமுக அதிகார சபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/03/PT/6600 (MP) | 06 Nos. Main Hoist Wire Ropes of Size 22.4MM X 408M | 90,000.00 | 1,000.00 | 26-09-2024 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/24/PT/16/007 | 01 No. Skimmer | 100,000.00 | 3,500.00 | 10-09-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/10/055 | Conventional Fire Alarm Panels 24 VDC/04 Zones | 50,000.00 | 1,000.00 | 10-09-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/07/057 | Carbolic Soap 100 Grams | 42,500.00 | 1,000.00 | 10-09-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/10/061 | Rubber Fender Set for Pilot Launch No. 13 | 60,000.00 | 1,000.00 | 11-09-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/17/065 | 4000 PRS. Of Safety Shoes – Year 2024 | 430,000.00 | 3,500.00 | 11-09-2024 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை (PCA 03 படிவம்) கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக்குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024 ஆகஸ்ட் 16ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்படப்பிட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண்: 2381652, 2470443**

## உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

### மருத்துவ உபகரணங்கள், மருத்துவ உபகரண துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

1. கோரப்பட்ட பொருட்களுக்காக எந்தவொரு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இந்த ஒப்பந்தங்களின் தொழில்தருநர் சார்பாக கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் பிரதேச பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| இல. | உருப்படிகள் | எண்ணிக்கை | மதிப்பீட்டுக் கிரயம் (ரூபா) (மில்லியன் களில் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | CT Tube for CT Scanner Machine – DGH Embilipitiya | 01 | 34 | 12,500.00 |
| 02 | UPS Batteries for PET CT Scanners – Apeksha Hospital | 40 | 1.8 | 500.00 |
| 03 | Radiation Inspector (Radiation Survey Meter) | 01 | 12.08 | 3,500.00 |

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் இடம்பெறும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராகவிருத்தல் வேண்டும்.
4. கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவின் கணக்காளர் அலுவலகத்தில் விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் உடன் திறக்கப்படும்.
5. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிக்காக, ஒவ்வொரு விலைமனுதாரரும் 5 மில்லியன் இலங்கை ரூபாவை விஞ்சும் கேள்வியிடல் தொகையின் பொருட்டு 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பந்தியின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-08-15ஆம் திகதி முதல் 2024-09-04ஆம் திகதி வரையான பொதுவான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவிலிருந்து முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் செலுத்துதல் வேண்டும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென இரு பிரதிகளில் முன்வைத்தல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வெவ்வேறான இரு உறைகளில் இட்டு ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு முத்திரைக்குறியிடப்பட்ட உறையினுள் இட்டு, அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு, முத்திரைக் குறி பொறித்து அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கம்'' என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்களை 2024-09-05ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிரதேச பெறுகைக் குழு, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, இல. 27, டி சேரம் பிளேஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்குக் கிடைக்கச்செய்தல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2024-12-04ஆம் திகதி வரையில் செல்லபடியாதல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியாக நிபந்தனையற்ற மற்றும் கோரிக்கை வங்கி உத்தரவாதம் 2025-01-01ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
9. மேலதிக விபரங்களை உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் கணக்காளரிடமிருந்து 2684732 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு,**
**இல. 27, டி சேரம் பிளேஸ்,**
**கொழும்பு-10**

Daily News Classifieds, the Housewives' companion

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஓகஸ்ட் 15 வியாழக்கிழமை
தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 04.46
ளுஹர் - 12.16
அஸர் - 03.31
மஃரிப் - 06.26
இஷா - 07.38

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆடி 30
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 7.35 - 9.05வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# தோட்டத் தொழிலாளர்களின் 1,700 ரூபா சம்பள அதிகரிப்பை எவரும் உரிமை கோர முடியாது

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

சம்பள நிர்ணய சபை ஊடாக தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பளம் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதால், சம்பள விடயத்தில் எவரும் உரிமை கொண்டாட முடியாதென அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பை அரசியல் நோக்கத்துக்காக இ.தொ.கா மேற்கொள்ளவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார். இவர்,1,700 ரூபா சம்பள அதிகரிப்பை பெற்றுக் கொடுத்த மைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



ஊடகங்களுக்கு நேற்று (14) கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

கொழும்பு பம்பலப்பிட்டியில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

சம்பள நிர்ணய சபையின் தீர்மானத்துக்குப் பின், சில அரசியல் தலைவர்களும் தொழிற்சங்கத் தலைவர்களும் இது ஒரு ஏமாற்று விடயம் என்றும் துரோகச் செயல் என்றும் தெரிவித்தனர். நாம் அர்ப்பணிப்புடன் முழுமையாக ஈடுபட்டு அதனை பெற்றுக் கொடுத்துள்ளோம் என்பதை அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம்.

மே, முதலாம் திகதி நாம் வெளியிட்ட வர்த்தமானியில் 1,350 ரூபா அடிப்படை சம்பளமும் 350 ரூபா ஊக்குவிப்பு கொடுப்பனவையும் வழங்கியிருந்தோம். இந்த சம்பள விடயத்திற்கு தாங்களும் அழுத்தம் கொடுத்துள்ளதாக பலர் தெரிவித்து வருகின்றனர். நான் வெளிப்படையாகவே கூற விரும்புகிறேன். இந்த சம்பள விடயத்திற்கு எவரும் உரிமை கொண்டாட முடியாது. இது அரசியல் நோக்கத்திற்காக நாம் மேற்கொண்ட விடயமும் அல்ல என்பதை தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



தினகரன் வாரமஞ்சரியில் இந்திய சமகால அரசியல் குறித்து தொடராக எழுதி வரும் நந்தவனம் சந்திரசேகரன், தனது ஆக்கங்களின் தொகுப்பை நூலுருவில் வெளிக்கொணர்துள்ளார். நூலின் சிறப்பு பிரதி ஒன்றை லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் அவர்களுக்கு நேற்று கையளித்த போது எடுத்த படம். அருகில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் ஆகியோர் காணப்படுகின்றனர். நந்தவனம் சந்திரசேகரன், கடந்த 27 வருடங்களாக தமிழகத்திலிருந்து வெளிவரும் இனிய நந்தவனம் சஞ்சிகையின் ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது.



சர்வதேச புலம்பெயர்ந்தோர் அமைப்பின் (IOM) இலங்கைக்கான புதிய தலைமை அதிகாரி கிறிஸ்டின் பார்கோ (Kristin B. Parco) தனது நற்சான்றிதழ்களை வெளிநாட்டமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரியிடம் கையளித்த போது பிடிக்கப்பட்ட படம். வெளிநாட்டமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், இலங்கைப் பிரஜைகளுக்கு சர்வதேச புலம்பெயர்ந்தோர் அமைப்பு (IOM) வழங்கிய சிறந்த சேவைகளைப் பற்றி அமைச்சர் அலிசப்ரி, புதிய IOM அதிகாரியிடம் குறிப்பிட்டார். இலங்கையில் அவரது பதவிக்காலம் வெற்றிகரமாக அமைய வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

தினகரன்
THINAKARAN

## 92 வருடங்களுக்கு முன் தினகரன்
இன்று 15 ஓகஸ்ட் 1932


ஸ்ரீமதி நேசத்துக்கு வரவேற்பு
வெள்ளவத்தையில் கூடிய கூட்டம்
தலைவர் விரிவுரை
கொழும்பு தென் பகுதி மாதரின் உபசாரம்

பெருந் தொகையான தமிழர்கள் மண்டபத்தில் குழுமி இருந்தார்கள். அங்கு விஜயஞ் செய்திருந்த பிரமுகர்களுள் பின் வருவோருஞ் சிலராகும்:—கௌரவ திரு. எ. எப் மொலமுரே, ஸ்ரீமதி மொலமுரே, திரு. டப்ளியூ. ஏ. டி. சில்வா, ஸ்ரீமதி சில்வா, திரு. எஸ். டப்ளியூ. தசநாயகா.

இனிய ஈழத் தேச சங்கீதமும் நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

ஸ்ரீமதி சரவணமுத்து கூட்டத்துக்கு வந்ததும், மாலை சூட்டப்பெற்று, கூட்டத்தில் தலைமை வகித்த ஸ்ரீமதி எச். ஏ. பீ. சந்திரசேகராவால் வரவேற்கப்பட்டு, மேடையில் வீற்றிருந்தார்.

### ஸ்ரீமதி நேசத்துக்கு வரவேற்பு
**வெள்ளவத்தையில் கூடிய கூட்டம்**
### தலைவர் விரிவுரை
கொழும்பு தென்பகுதி மாதரின் உபசாரம்

நேற்றுமுன்தினம், பிற்பகல் வெள்ளவத்தை பிளேஸா தியேட்டர் மண்டபத்தில், அரசாங்க சபைக்கு அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஸ்ரீமதி நேசம் சரவணமுத்துவுக்கு உபசாரஞ் செய்யும் நோக்கமாக கொழும்பு தென்பகுதியிலுள்ள தமிழ் மாதரால் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது.

**(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)**

# உயர் பதவிகள் பற்றிய பாராளுமன்ற குழு 10 நியமனங்களுக்கு பரிந்துரை




ஆறு புதிய தூதுவர்கள், ஒரு உயர்ஸ்தானிகர், இரண்டு அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் ஒரு நியதிச்சட்ட நிறுவனத்தின் தலைவரின் நியமனத்துக்கு

உயர் பதவிகள் பற்றிய குழு பரிந்துரைத்துள்ளது.

இக்குழு அண்மையில் பாராளுமன்றத்தில் கூடியபோதே இதற்கான பரிந்துரையை இக்குழு வழங்கியது.

இதற்கமைய, இந்தோனேஷியாவுக்கான இலங்கை தூதுவராக திருமதி எஸ்.ஏ.பி.பி. சேரம் என்பவரின் பெயரையும், கட்டார் குடியரசுக்கான இலங்கை தூதுவராக திருமதி ஆர். எஸ்.கே. அஸாட்டின் பெயரையும் உயர் பதவிகள் பற்றிய குழு பரிந்துரைத்துள்ளது.

ரஷ்யாவுக்கான இலங்கை தூதுவராக திருமதி எஸ்.கே. குணசேகர மற்றும் எகிப்துக்கான இலங்கை தூதுவராக ஏ.எஸ்.கே. செனவிரத்ன ஆகியோரின் பெயர்களும் உயர் பதவிகள் பற்றிய குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஈரானிய இஸ்லாமியக் குடியரசுக்கான இலங்கை தூதுவராக என்.எம். ஷஹீட் , பஹ்ரைன் இராஜ்ஜியத்துக்கான இலங்கை தூதுவராக திருமதி வை.கே. குணசேகர மற்றும் நியூஸிலாந்துக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக எஸ்.பி. வல்பில கமகே ஆகியோரின் பெயர்களும் உயர் பதவிகள் பற்றிய குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் அமைச்சின் புதிய செயலாளராக பி.கே.பி. சந்திரகீர்த்தி மற்றும் கைத்தொழில் அமைச்சின் புதிய செயலாளராக எஸ். வீரசிங்க ஆகியோரின் நியமனங்களுக்கும் உயர் பதவிகள் குழுவின் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியாக கலாநிதி டி.டீ.கே. பேர்னாட்டின் நியமனத்துக்கும் உயர் பதவிகள் பற்றிய குழு பரிந்துரை வழங்கியுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய உயர் பதவிகள் பற்றிய குழுக் கூட்டத்தில், குழுவின் உறுப்பினர்களான ஜோன் செனவிரத்ன, அனுர பிரியதர்ஷன யாப்பா, ரிஷாட் பதியுதீன், தலதா அத்துகோரல மற்றும் உதய கம்மன்பில ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு புதிய தலைவர்



சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் புதிய தலைவராக, பாராளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவல போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவலவின் பெயரை, தலைவர் பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த முன்மொழிந்ததுடன் அதனை பாராளுமன்ற உறுப்பினர் கோகிலா குணவர்த்தன வழிமொழிந்தார்.

06

# தாய்லாந்து பிரதமர் அதிரடி பதவி நீக்கம்



தாய்லாந்து பிரதமர் சிரேத்தே தாவிசின் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.அரசியலமைப்பை மீறியதாக நீதிமன்றம் தெரிவித்ததையடுத்து இவர், அதிரடியாக பதவிநீக்கப்பட்டார்.

06

# ஜனக ரத்நாயக்க நேற்று கட்டுப்பணம் செலுத்தினார்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

பொதுப்பயன்பாட்டு ஆணைக் குழுவின் முன்னாள் தலைவரான ஜனக ரத்நாயக்க, நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தீர்மானித்துள்ளதுடன் நேற்றைய தினம் கட்டுப்பணத்தையும் செலுத்தியுள்ளார்.

ஜனக ரத்நாயக்க எக்ஸத் லங்கா பொதுஜன கட்சியின்

06

விமான மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா) லிமிடெட்

## மாபெரும் ஏல விற்பனை

கட்டுமான மரக்கட்டைத்துண்டுகள் மிகப்பெரிய ஏலத்தில் விற்பனை.

**செவ்வாய் 27, ஆகஸ்ட் 2024**

காலை மு. ப. 10.30 க்கு
கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நிறை அளவு உள்ளடக்கியது :

கட்டுமான மரக்கட்டைகள் :

| அளவு | இடம் |
|---|---|
| 1 -20 | பிரதான முனைய கட்டிடம் |
| 21 - 29 | பாலத்தின் தூண்- 2 |

**பார்வையாளர் நேரம் - திங்கள் 26, ஆகஸ்ட் 2024**
**காலை 9.00 மணி முதல் மாலை 3:00 மணி வரை**
(கட்டுநாயக்க ஏ. ஏ. எஸ். எல் அலுவலக வளாகத்திற்கு எதிரே உள்ள (ரிமோட் கார்பார்க்) தொலைதூர வாகன நிறுத்துமிடத்திற்கு ஆஜராக வேண்டும்.)

**விற்பனைக்கான நிபந்தனைகள்**
- பார்வையிடும் நாட்களில், விலைக்கு வாங்குபவர்கள் ஆய்வுக்காக தொகுதிகளாக அழைத்துச் செல்லப்படுவார்கள்.
- ஆய்வு கட்டணம் ஒரு நபருக்கு 500 ரூபாய்.
- நுழைவாயில் : திருப்பிச் செலுத்தப்படாத டிக்கெட் மூலம் ஒரு நபருக்கு ரூ. 5,000.00 மற்றும் திருப்பிச் செலுத்தக்கூடிய வைப்பு ஏல நாளில் ஒரு நபருக்கு ரூ. 30,000.00. பதிவு செய்வதற்காக காலை 8.30 மணிக்கு கதவு திறக்கப்படும். வாங்குபவர்கள் முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் ஏல இடத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.
- பணம் செலுத்துதல்: திருப்பிச் செலுத்த முடியாத வைப்பு - ஆரம்ப வைப்பு 25% மற்றும் சுத்தியல் வீழ்ச்சியில் 75% நிலுவைத் தொகை பணத்தை செலுத்துதல். ஏலத்திற்குப் பிறகு ஒரு நாளுக்குள் அகற்றுதல் அல்லது புதன்கிழமை, 28 ஆகஸ்ட் , 2024 பிற்பகல் 3:00 மணிக்குள் அகற்றுதல்.
- ஏ. ஏ. எஸ். எல் நிர்வாகத்திற்கு ஏலத்தில் இருந்து எந்தவொரு அளவுகளை (லாட்டையும்) முன் அறிவிப்பு இல்லாமல் திரும்பப் பெற உரிமை உண்டு.
- ஏலக்காரரின் முடிவு இறுதியானது.

DK's AUCTIONS
To Professionally Serve the Nation

Buy or Sell in Confidence with
**DALLAS KELAART's Auctions (Pvt.) Ltd.**
146/3, Caldera Gardens, Off Dutugemunu Street, Kohuwela
Tel: 11 4367467, 11 4367111 | E-mail: aucslk@gmail.com | facebook.com/kelaartauctions

# மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க விசேட வசதி

**தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு**

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

ஜனாதிபதித் தேர்தலில் மாற்றுத் திறனாளிகள் வாக்களிப்பதற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக, தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.இதற்கென இவர்களுக்கு தற்காலிக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும்

தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக தேசிய அடையாள அட்டை, செல்லுபடியாகும் வாகன அனுமதிப்பத்திரம், செல்லுபடியாகும் கடவுச்சீட்டு, சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட முதியோர் அடையாள அட்டை, ஓய்வூதியத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஓய்வூதியம் பெறுபவரின் அடையாள அட்டை ஆகியவற்றை பயன்படுத்த முடியும்.

இவை எதுவுமே இல்லாதவர்கள் ,தமது பிரிவு கிராம சேவை உத்தியோகத்தரின் மூலம் தேர்தல் அலுவலகத்திற்குச் சென்று தற்காலிக அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம்.இதைப்பயன்படுத்தி மாற்றுத் திறனாளிகள் வாக்களிக்க முடியும்.

# இராமேஸ்வரம் மீனவர்கள் எல்லை தாண்டக் கூடாது

**இந்திய கடற்படை வலியுறுத்தல்**




**(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)**

இராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் மீன் பிடித் துறைமுகங்களிலிருந்து மீன் பிடிக்கச் செல்லும் இராமேஸ்வரம் மீனவர்கள்,இலங்கை கடற்பரப்புக்குள்

எல்லை தாண்டக்கூடாதென இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.

மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டதால்,விசைப்படகுகளில் தமிழக மீனவர்கள் கடலுக்குச் செல்கின்றனர்.இவ்வாறு சென்ற இவர்களில் இந்த இரண்டு மாதங்களில் 122 பேர்,கைது செய்யப்பட்டுள்ளனர்.இவர்களின் விசைப்படகுகள் மற்றும் நாட்டுப்படகுகளும் கைப்பற்றப்பட்டிருந்தன.

06

தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 30ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ஸபர் பிறை 09

### குறள் தரும் சிந்தனை



நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்

*நல்லொழுக்கம், வாழ்க்கையில் நன்மைக்கு வித்தாக அமையும். தீயொழுக்கம், தீராத துன்பம் தரும்.*

# வேட்புமனு ஏற்பதற்கான விரிவான ஏற்பாடுகள்

ஜனநாயக விழுமியங்களைப் பின்பற்றி வரும் இலங்கையில் நாட்டின் தலைவராக விளங்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, ஜனாதிபதித் தேர்தல் ஊடாகத் தெரிவு செய்யப்படுவது வழமையாகும்.

அந்த வகையில் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி நாட்டின் தலைவரைத் தெரிவு செய்வதற்கான ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவிருக்கின்றது. இத்தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தேர்தல்கள் ஆணைக்குழு செயலகத்தில் இன்று காலை 9.00 முதல் 11.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட உள்ளன. இதன் நிமித்தம் விரிவான ஏற்பாடுகளை தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

கடந்த ஜுலை 26 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியும் வேட்புமனு ஏற்றுக் கொள்ளப்படும் தினமும், கட்டுப்பணம் ஏற்றுக் கொள்ளப்படும் காலமும் அறிவிக்கப்பட்டன.

அதற்கேற்ப இத்தேர்தலில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகின. அந்த வகையில் நேற்று நண்பகல் வரையும் 22 அரசியல் கட்சிகளையும் 17 சுயேச்சைக் குழுக்களையும் ஒரு பதிவு செய்யப்படாத கட்சியையும் சேர்ந்த மொத்தம் 40 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். இவர்களது வேட்புமனுக்கள் தேர்தல் செயலகத்தில் இன்று ஏற்றுக் கொள்ளப்பட உள்ளன.

இதன் நிமித்தம் தேர்தல் செயலகமும் அதனை சூழ உள்ள பிரதேசங்களும் காலை 8.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணி வரை பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இந்த பாதுகாப்பு வலயம் ராஜகிரிய சரண மாவத்தையை உள்ளடக்கியதாக அமைந்துள்ளதால் அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்களும் வாகனங்களும் மாத்திரமே இப்பகுதிக்குள் அனுமதிக்கப்பட முடியும்.

இந்த நிலையில்தான் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க, இன்றைய தினம் இங்கு அனைத்து பொது நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டிருக்கும். அப்பகுதியில் உள்ள அனைத்து அரச அலுவலகங்களும் மருத்துவமனைகளும் இக்காலப் பகுதியில் மூடப்பட்டிருக்கும். அதனால் பொதுமக்கள் அப்பகுதியை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. 1400 இற்கும் மேற்பட்ட பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொலிஸாரின் ட்ரோன் பிரிவினரும் விமானப்படையினரின் ஸ்னைப்பர் பிரிவும் இங்கு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அதேநேரம் இப்பகுதி பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் இக்காலப்பகுதியில் உத்தியோகபூர்வ அல்லது தனிப்பட்ட தேவைகளுக்காக அப்பகுதிக்கு செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு பொலிஸாரும் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இவை இவ்வாறிருக்க, இன்று காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரையும் இப்பகுதியில் விஷேட போக்குவரத்து ஒழுங்கும் நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றன. அதற்கான ஏற்பாடுகளை போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். அத்தோடு வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் இப்பகுதியில் ஊர்வலம், பேரணி நடத்தப்படுவதும் தடை செய்யப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளவென விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதனால் இன்றைய தினம் இப்பகுதியில் உள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையே காணப்படும். இதனைக் கருத்தில் கொண்டு செயற்படுவது மக்களின் பொறுப்பாகும்.

இன்று வேட்புமனு ஏற்கப்பட்டதும் ஒவ்வொரு அரசியல் கட்சியும் சுயேச்சைக்குழு அபேட்சகரும் வெவ்வேறு பிரதேசங்களில் தங்களது தேர்தல் பிரசாரங்களை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களை விடவும் இந்தத் தேர்தல் குறித்து கட்சிகளும், அவற்றில் ஆதரவாளர்களும் மாத்திரமல்லாமல் பொதுமக்களும் கூட கூடுதல் கவனம் செலுத்தும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இதன் விளைவாக தேர்தல்கால வன்முறைகள் ஏற்படக்கூடிய அச்சமும் ஏற்பட்டுள்ளது. முதலாவது வன்முறை வேட்புமனு ஏற்கப்பட முன்னர் கண்டி பிரதேசத்தில் அண்மையில் பதிவானது. அதனால் தேர்தலை வன்முறைகள் அற்ற முறையில் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கூட தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. அந்த வகையில் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் உள்நாட்டு, வெளிநாட்டு சுயாதீன கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தவும் தேர்தல்கள் ஆணைக்குழு நவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

ஆகவே நாட்டின் ஜனநாயக விழுமியங்களை மேலும் வலுப்படுத்தும் வகையில் இடம்பெறக் கூடிய இத்தேர்தலை சிறந்த முறையில் நடத்தி முடிப்பதற்கு அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் மாத்திரமல்லாமல், வாக்காளர்களும் முழுமையான ஒத்துழைப்பும் ஆதரவும் நல்க வேண்டும். அது நாட்டின் ஜனநாயகப் பாரம்பரியங்களை மேலும் வலுப்படுத்த அளிக்கும் பங்களிப்பாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# இந்தியாவின் 78 ஆவது சுதந்திரதினம் இன்று

## டெல்லி செங்கோட்டையில் தேசியக்கொடி ஏற்றி வைத்து பிரதமர் மோடி உரை




இந்தியாவின் 78 ஆவது சுதந்திரதினம் ஒகஸ்ட் 15ஆம் திகதியான இன்று கொண்டாடப்படுகிறது.

ஆங்கிலேயர்களிடம் இருந்து சுதந்திரம் கிடைத்த ஒகஸ்ட் 15ஆம் திகதி இந்தியாவின் சுதந்திர தினமாக கொண்டாடப்படுகிறது. ஆங்கிலேயர்களிடம் இருந்து இந்தியா சுதந்திரம் பெற்ற நாளை நினைவுக்கூரும் வகையில் ஒவ்வொரு வருடமும் சுதந்திர தினம் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

இன்று 78 ஆவது சுதந்திரம் தினம் கொண்டாடப்படுகிறது. பள்ளி, கல்லூரிகள் இந்நாளில் பேச்சு மற்றும் கட்டுரை போட்டிகள் நடைபெறும். பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து இந்தியா 1947 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. அனைத்து மாநிலங்களையும் சேர்ந்த மக்களும் யூனியன் பிரதேசங்களில் உள்ள மக்களும் சுதந்திர தினத்தை தேசிய விடுமுறையாக கொண்டாடி வருகின்றனர்.

இந்தியாவின் தேசியக் கொடி உயரத்தில் உயர்த்தப்பட்டு பெருமை மற்றும் தேசபக்தியுடன் தேசியகீதம் பாடப்படுவது வழக்கம். இன்று பாடசாலை மற்றும் கல்லூரிகளிலும் அரசு அலுவலகங்களிலும் நிகழ்வுகள் நடைபெறுகின்றன. அரசு அலுவலகங்கள் மற்றும் வீடுகளில் தேசியக்கொடி கொண்டு அலங்கரித்து மக்கள் தங்களது சுதந்திர தின விழாவை கொண்டாடுகின்றனர்.

சுதந்திர தினத்தன்று மாநில தலைநகரங்களில் பல்வேறு கலாசார நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. டெல்லியில் நடைபெறும் பிரதான நிகழ்வில் பிரதமர் பங்கேற்கிறார். கொடியேற்ற விழா நடந்த பிறகு ஆயுதப்படை மற்றும் பொலிஸ் துறையினர் அணிவகுப்பு நடத்தப்படும். ஆண்டின் இந்தியாவில் முக்கிய சாதனைகள் குறித்தும் எதிர்கால சவால்கள் மற்றும் இலக்குகள் போன்றவை குறித்து பேசப்படுகின்றது.

ஒவ்வொரு நாட்டிற்கும் அந்த நாட்டின் தேசியக் கொடி மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. இந்திய தேசியக் கொடியானது மூவர்ண கொடியாக உள்ளது. சுதந்திர போராட்ட வீரர்களின் தியாகத்தால் இந்தியா சுதந்திரக் காற்றை சுவாசித்து வருகிறது. தியாகிகளின் தியாகத்தை போற்றும் வகையில் உருவாக்கப்பட்டது தேசியக்கொடி. இந்திய தேசியக் கொடியானது காவி, வெள்ளை, பச்சை என மூன்று வண்ணங்களைக் கொண்டுள்ளது.

காவி நிறம் என்பது பலத்தையும் தைரியத்தையும் குறிக்கக் கூடியதாக அமைந்துள்ளது. வெள்ளை நிறம் அமைதியையும் உண்மையையும் குறிக்கின்றது. பச்சை நிறம் வளர்ச்சி பசுமை மற்றும் விவசாயத்தை குறிப்பதாக அமைந்துள்ளதால் தேசியக்கொடி மிகவும் போற்றத்தக்கதாக உள்ளது.

இந்திய தேசியக் கொடியின் மையப் பகுதியில் 24 ஆரங்களை கொண்ட அசோக சக்கரம் அமைந்துள்ளது, தர்மம் காக்கப்பட வேண்டும் என்ற வகையில் அசோகச் சக்கரம் அமைந்துள்ளது.

இன்று 78 ஆவது சுதந்திர தின விழா கொண்டாடப்படும் நிலையில், டில்லி செங்கோட்டையில் பிரமாண்டமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பிரதமர் நரேந்திர மோடி தேசியக் கொடியை ஏற்றி வைத்து தனது உரையை ஆற்றுகிறார். இது அவரது 11ஆவது சுதந்திரதின உரையாகும். தலைநகரில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போக்குவரத்து பொலிசார் , 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொலிசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 700 ஏ.ஐ அடிப்படையிலான கண்காணிப்பு கமராக்களும் முக்கிய இடங்களில் பொருத்தப்பட்டுள்ளன.

விமான நிலையம், ரயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள், வணிக வளாகங்கள், சந்தைகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கூடுதல் பொலிசார் மற்றும் துணை இராணுவப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். சிறப்பு விருந்தினர்களின் பாதுகாப்பிற்காக அனைத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டுக்கான சுதந்திர தின விழா, 'வளர்ந்த பாரதம்' என்ற கருப்பொருளில் கொண்டாடப்படுகின்றது.

# பாகிஸ்தான் சுதந்திரத்தின் 78 ஆவது ஆண்டு விழா

## இலங்கையில் பாக். உயர்ஸ்தானிகரக ஏற்பாட்டில் நிகழ்வு



பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் இலங்கையிலுள்ள பாகிஸ்தான் சமூகத்தினருடன் இணைந்து 'பாகிஸ்தானை வலுவான, ஆற்றல்மிக்க, முற்போக்கான, சகிப்புத்தன்மை மற்றும் ஜனநாயக இஸ்லாமிய நலன்புரி நாடாக மாற்றுதல்' என்ற தொனிப்பொருளில் பாகிஸ்தானின் சுதந்திரத்தின் 78 ஆவது ஆண்டு விழாவை கொண்டாடியது.

இலங்கையில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வுநிலை) பாஹீம் உல் அஸீஸ் பாகிஸ்தான் தேசிய கீதம் இசைக்கப்படும் வேளையில் பாகிஸ்தானின் தேசியக் கொடியை ஏற்றி இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் ஜனாதிபதி மற்றும் அந்நாட்டின் பிரதமர் ஆகியோரின் விசேட செய்திகள் வாசிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) பாஹீம் உல் அஸீஸ், இந்நாளின் சிறப்பினை குறிப்பிட்டதோடு, இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையில், நமது இராஜதந்திர பாதுகாப்பு மற்றும் கலாசார உறவுகளை தொடர்ந்து வளர்த்து வரும் அதேவேளையில், சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கட்டமைப்பிற்குள் வர்த்தகம் மற்றும் இருதரப்பு முதலீட்டை மேம்படுத்துவதன் மூலம், இரு நாடுகளுக்கு இடையே பொருளாதார இணைப்புகளை விரிவுபடுத்தவும் வழிகளை ஆராய்ந்து வருகிறோம்" என்று குறிப்பிட்டார்.





இராஜதந்திர உறுப்பினர்கள், பாகிஸ்தான் சமூகத்தினர், உயர் ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகள் மற்றும் குடும்பத்தினர், உள்ளூர் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள், பாகிஸ்தானின் ஆதரவாளர்கள் உட்பட ஏராளமானவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

அஷ்ரப் ஏ சமட்...

# ஆரம்பநிலை மாணவர்களின் கல்வியை பாதிக்கும் சிக்கல்கள்

ஆரம்ப நிலையென்து தரம் ஒன்று முதல் ஐந்து வரையான வகுப்புக்களாகும். இதுவே மாணவர்களின் முறை சார்ந்த கற்றலில் முதல் நிலையாகும்.

ஆரம்பக் கல்வியானது முறையாக ஒரு பிள்ளையிடம் சென்றடைய வேண்டும் அதற்கு பொறுப்புதாரியாக ஆசிரியர்களே காணப்படுகின்றனர். ஆரம்பக் கல்வியில் காணப்படும் முக்கிய பாதகமான செயற்பாடாக மாணவர்களை மனரீதியாக பாதிக்கும் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை உள்ளது.

இப்பரீட்சையை பெற்றோர்களின் பரீட்சையாக நோக்கலாம். ஏனென்றால் இது அவர்களின் கௌரவப் பிரச்சினையாக பார்க்கப்படுகின்றது. மாணவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் பரீட்சை இதுவல்ல. மேலும் இப்பரீட்சையில் சித்தி அடைந்த யாவரும் பல்கலைக்கழக அனுமதியை பெறுவது இல்லை. அதேசயம் சித்தியடையாத பலர் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளனர் என்பதை பல பெற்றோர் அறிவதில்லை.

தனியார் கல்வி நிறுவனங்கள் இந்தக் குழந்தைகளை பகடைக்காயாக வைத்து பணத்தை சுரண்டுகின்றன. மேலும் இதனை பாடசாலைகள் போட்டியாக பார்க்கின்றன. இதன் காரணமாக மாணவர்கள் அளவுக்கு மீறிய மனஅழுத்தத்துக்கு உள்ளாகின்றனர். வயதுக்கு மீறிய சுமையானது மனரீதியாக கல்வியில் வெறுப்பைக் கொண்டு வருகிறது.

இதனால் அவர்கள் வாழ்நாள் முழுவதும் கல்வியை வெறுப்பாக பார்க்க வேண்டிய நிலை உருவாகும். பெற்றோர்கள் இதற்கு பொறுப்பு கூற வேண்டியவர்களாக காணப்படுகின்றனர். சில பெற்றோர் இம்மாணவர்களை உயர்தர, சாதாரண தர மாணவர்களாகக் கருதி அழுத்தம் கொடுக்கின்றனர்.



புலமைப்பரிசில் பரீட்சையானது எவ்வாறான பரீட்சை என்பதை அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் ஆரம்பக் கல்வி மாணவர்களின் பெற்றோர்களுக்கே வழிகாட்டல் ஆலோசனை அவசியமாக உள்ளது. அவ்வாறு இல்லையெனில் சமூகத்தில் இவ்வாறான குழந்தைகள் மனரீதியாக, உடல்ரீதியாக பாதிக்கப்படுவர். கண்டித்து கல்வியை வெறுப்பு ரீதியான செயற்பாடாக நோக்கப்படுவதை தவிர்க்க முடியாமல் போய்விடும். ஆகவே பெற்றோர்களுக்கு உளவள ஆலோசனை அவசியமாக உள்ளது.

ஆரம்ப நிலை மாணவர்களின் கல்வியை பாதிக்கும் காரணிகளில் மறைமுகமான காரணியாக சூழல் காணப்படுகிறது. மாணவர்களின் சூழலை அடிப்படையாகக் கொண்டே கல்விநிலை தீர்மானிக்க படுகின்றது.

இதன்படி குழந்தை வாழும் சூழல் குழந்தையின் கல்வியை பாதிக்கும். குழந்தை கற்க வேண்டிய சூழலை உருவாக்கும் பொறுப்பு பெற்றோருக்குரியது.

குழந்தை கல்வி கற்க சிறப்பான சூழ்நிலை அமைத்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பு முக்கியமாக பெற்றோருக்கு உரியது. ஆரம்ப நிலை மாணவர்கள் சந்திக்கும் மற்றொரு பாரிய பிரச்சினையாக அவர்களின் ஆங்கில கல்வியை கூறலாம். சில பாடசாலைகளில் ஆரம்பநிலை மாணவர்களுக்கான ஆங்கிலம் ஒழுங்கான அமைப்பில் வழங்கப்படாததை காணமுடிகிறது. பெரும்பாலான ஆரம்ப நிலை கற்கும் மாணவர்கள் ஆங்கில கல்வியை கற்பதற்காக தனியார் வகுப்புகளை நாடுவதை காணமுடிகிறது. ஆங்கில கல்வியினை தனியார் வகுப்புகளில் நாட காரணம் ஆரம்பநிலை பாடசாலையில் அது ஒழுங்கான முறையமைப்பில் கொண்டு செல்லாதது காரணமாகும். ஆனால் குறிப்பிடத்தக்கது சில ஆரம்ப நிலை பாடசாலைகளில் (English activity room) என பல செயற்பாடுகளில் மூலம் ஆங்கிலக் கல்வியினை விருத்திசெய்வதை காண முடிகிறது.

அடிப்படை ஆங்கில அறிவு இல்லாததற்கு காரணம் அது ஆரம்பக் கல்வியில் ஒழுங்காக வழங்கப்படாதமையே ஆகும். வசதி படைத்த பிள்ளைகள். தனியார் வகுப்புகளில் கற்கின்றனர். ஆனால் மத்திய தரத்தில் உள்ள மாணவர்கள் அசாதாரணதிற்கு முகம்கொடுக்கின்றனர். சில மாணவர்கள் விண்ணப்பப் படிவத்தை கூட பூர்த்தி செய்ய தெரியாமல் சமூகத்தில் காணப்படுகின்றனர்.

இஸ்மா இக்பால்...
இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு கல்வியல் சிறப்பு கற்கை மாணவி கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை கலை கலாசாரபீடம், கிழக்கு பல்கலைகழகம்

# நாட்டை அழிப்பதற்கு பாதாள உலகக் குழுக்களுக்கும் போதைவஸ்து வியாபாரிகளுக்கும் இடமளிக்க முடியாது!



## விசேட அதிரடிப்படை நடவடிக்கை நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் ஜனாதிபதி

## ஜூலை 2022 இல் நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டதால், 2024 செப்டம்பர் 21 ஆம் திகதி ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்ய மக்களுக்கு வாய்ப்பு

2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டப் பாடுபட்டதன் மூலம் 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கு இந்நாட்டு மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அனைத்து பாதுகாப்பு தரப்பு உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி தனது நன்றியைத் தெரிவித்தார்.

அத்துடன், சட்டம் ஒழுங்கை உறுதிப்படுத்தி நாட்டில் சுதந்திரமான தேர்தலுக்கு ஒத்துழைப்பது ஜனாதிபதி என்ற வகையில் தனதும் தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் திணைக்களம் ஆகிய தரப்பினரதும் பொறுப்பு என ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் ஸ்ரீ ஜெயவர்தனபுர விசேட அதிரடிப்படை நடவடிக்கை நிலையத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்றுமுன்தினம் (13) கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நாட்டில் எந்த வகையிலும் வன்முறைகளுக்கும் இடமளிக்கக் கூடாது என வலியுறுத்திய ஜனாதிபதி, அது தொடர்பில் அனைவரும் பொறுப்புடன் செயற்படுமாறு கேட்டுக் கொண்டார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர விசேட நடவடிக்கை மையத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கௌரவமான வரவேற்பு அளித்தனர்.

பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து, விசேட அதிரடிப் படைக் கட்டளை நடவடிக்கை நிலையத்தைத் திறந்து வைத்த ஜனாதிபதி, படையினரின் வீடுகளை நேரில் சென்று பார்வையிட்டார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் தற்போதைய தளபதி, பிரதி பொலிஸ் மாஅதிபர் சட்டத்தரணி வருண ஜயசுந்தர, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நினைவுப் பரிசில் ஒன்றை வழங்கினார்.

இந்த கட்டளை மையம் பொது ஒழுங்கு முகாமைத்துவம் மற்றும் மோட்டார் சைக்கிள் குழுவின் பிரதான மையமாக செயல்படும்.

பயங்கரவாத மற்றும் வன்முறை, தீவிரவாதத் தாக்குதல்கள், வன்முறை ஏற்படுத்தும் எதிர்ப்புகள், பணயக் கைதிகள் தொடர்பான விடயங்கள் மற்றும் ஏனைய நெருக்கடிகள் உட்பட பல்வேறு அவசரநிலைகளை கையாளும் பொறுப்பு இந்தப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டதாவது:

"போதைப்பொருள் ஒழிப்புக்காக தற்போதுள்ள அனைத்து பொலிஸ், இராணுவ மற்றும் சிவில் நிறுவனங்களை ஒன்றிணைத்து போதைப்பொருள் தடுப்புச் சட்டத்தின் கீழ் தனியொரு நிறுவனமாக உருவாக்கி, அதற்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்படும்.

பாதாள உலகக் குழுகளுக்கோ அல்லது போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கோ நாட்டை அழிக்க இடமளிக்க முடியாது. இலங்கையில் பாதாள உலக செயற்பாடுகளுக்கு எதிராக புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி புதிய சட்டங்கள் கொண்டு வரப்படும்.

அத்துடன், நாட்டு மக்களை சட்டம் ஒழுங்கின் கீழ் வாழ அனுமதிப்பது மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையாகும். அதனை சட்டத்தில் உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கின்றோம். நாட்டு மக்களை சட்டம் ஒழுங்கின் கீழ் வாழ இடமளிப்பது அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதாகும் என்பதைக் கூற வேண்டும். அதை சட்டத்தில் சேர்க்கவும் நாம் எதிர்பார்க்கிறோம்.

அடுத்த மாதத்தில், உங்களுக்கு இன்னொரு பாரிய பணியொன்று உள்ளது. ஜனாதிபதித் தேர்தல் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது. நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி, இத்தேர்தலை சட்டரீதியாக நடத்த வாய்ப்பளிப்பது பொலிஸ் திணைக்களத்தின் கடமையாகும். ஜனாதிபதி என்ற வகையில் எனதும் தேர்தல் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் கடமையும் ஆகும்.

அது மாத்திரமன்றி, தேர்தலுக்குப் பின்னரும் வன்முறைச் செயல்கள் நடப்பதற்கு இடமளிக்க முடியாது. நாம் அவற்றை நிறுத்த வேண்டும். இந்தத் தேர்தலுக்குப் பிறகு எந்த வகையிலும் வன்முறைகள் நடைபெறக் கூடாது. அது குறித்து நாம் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டில் சட்டம் ஒழுங்கு பேணப்பட்டதாலேயே இன்று இந்தத் தேர்தலை நடத்த முடிந்துள்ளது. நமது அரசியலமைப்பு பாதுகாக்கப்பட்டுள்ளதால், நாம் அரசியலமைப்பின் பிரகாரமே புதிய அரசாங்கத்தை நிறுவுகிறோம்.

1931 ஆம் ஆண்டு முதல் இலங்கை மாத்திரமே சர்வசன வாக்குரிமை மற்றும் ஜனநாயகத்தை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தியுள்ளது.

மனித உரிமை மீறல் உட்பட வேறு குற்றச்சாட்டுகளும் உள்ளன. ஆனால் இலங்கை மாத்திரமே இந்த ஜனநாயக முறையைத் தொடர்கிறது. இந்த பொறிமுறையை நாம் பாதுகாக்க வேண்டும்.

அதை ஒருபோதும் மீற இடமளிக்கக் கூடாது. அரசியல் கட்சிகளுக்கு இடையே எவ்வளவு பிரச்சினைகள் இருந்தாலும் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு வெற்றி தோல்வியை ஏற்று, வெற்றிபெற்றவரிடம் ஆட்சி கைமாற்றப்படுகிறது. இந்த சூழ்நிலையால்தான் இது சாத்தியமாகின்றது.

ஆனால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டின் அரசாங்கம் கவிழும் நிலைமை காணப்பட்டது. ஜனாதிபதி அலுவலகம், ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை ஆகியவற்றை ஆக்கிரமித்து, பிரதமரின் தனிப்பட்ட இல்லத்திற்கு தீ வைத்து, பிரதமர் அலுவலகத்தையும் ஆக்கிரமித்து, பாராளுமன்றத்தைக் கைப்பற்றவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் முயன்றனர்.

ஆனால் எமது இராணுவம் உட்பட சட்டத்தைப் பாதுகாக்கும் அனைவரும் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் அன்றைய தினம் பாராளுமன்றத்தைக் கைப்பற்றுவதைத் தடுக்க முடிந்தது. நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், வங்குரோத்து நிலையில் இருந்து காப்பாற்றவும் நான் அரசாங்கத்தை பொறுப்பேற்று தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளேன்.



அதனால் இன்று நாட்டில் தேர்தலை நடத்த முடிந்துள்ளது. அதற்காக நாம் பெருமைப்பட வேண்டும். ஆனால் இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் என்ன நடந்திருக்கும்?

அன்று நாம் எடுத்த நடவடிக்கைகளால்தான் இன்று இந்தத் தேர்தலை நடத்த முடிந்துள்ளது. இன்று பங்களாதேஷ் அரசாங்கம் வீழ்த்தப்பட்டுள்ளது. ஆட்சியைப் பொறுப்பேற்க யாரும் முன்வரவில்லை. எம்.பிக்கள் கொல்லப்படுகின்றனர்.

பாதுகாப்பு செயலாளர், பிரதம நீதியரசர் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் ஆகியோரை நாட்டை விட்டு வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. ஹோட்டல்கள் தீ வைத்து அழிக்கப்பட்டுள்ளன. அந்த நாட்டில் இன்னும் இயல்பு நிலை திரும்பவில்லை.

ஆனால், எமது நாட்டின் பாதுகாப்புப் படையினர் என்ற வகையில் நீங்கள் எடுத்த நடவடிக்கைகளால் நாங்கள் அந்த நிலையிலிருந்து காப்பாற்றப்பட்டோம். தற்போது செப்டெம்பர் 21ஆம் திகதி இந்நாட்டு மக்கள் தாங்கள் விரும்பும் வேட்பாளருக்கு வாக்களிக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

நாட்டில் சட்டம் ஒழுங்கை எல்லா நேரங்களிலும் நாங்கள் பாதுகாத்தோம். எனது நண்பர் முஹம்மது யூனுஸ் அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பங்களாதேஷில் சட்டம் ஒழுங்கு விரைவில் நிலைநாட்டப்பட வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். அதை ஒருபோதும் விட்டுவிடக் கூடாது.

இந்த நாட்டின் அடிப்படை உரிமை ஜனநாயகம். அதேபோன்று அரசாங்கத்தின் இருப்புமாகும். சட்டரீதியான அரசாங்கம் ஒன்று இருக்கின்றது என்றால், அந்த அரசாங்கத்தைப் பாதுகாக்க வேண்டும். நான் அதை 1970 இல் கற்றுக்கொண்டேன். ஐக்கிய தேசியக் கட்சி அன்று எதிர்க் கட்சியில் செயற்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சியின் போது எதிர்க்கட்சித் தலைவராகவிருந்த ஜே.ஆர் ஜயவர்தன, “எங்களுக்கு இந்த அரசாங்கம் பிடிக்கவில்லை. இந்த அரசை தூக்கி எறிய வேண்டும். ஆனால் நாம் அதை ஜனநாயகக் கட்டமைப்பில் செய்ய வேண்டும்” என்றார்.

அதேபோன்று, “இது ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல்" எனவே பண்டாரநாயக்கவின் அரசாங்கத்திற்கு நான் பூரண ஆதரவை வழங்குகின்றேன். இது எனக்கு விருப்பமான அரசாங்கமாக இல்லாவிட்டாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம்" என்று அவர் கூறினார். அன்றிலிருந்து இன்று வரை எங்களிடம் அந்த கட்டமைப்பு உள்ளது.

1989 ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்க மற்றும் அனுருத்த ரத்வத்த ஆகியோர் ஜனாதிபதி பிரேமதாசவைச் சந்தித்து “எங்களுடைய முழு ஆதரவையும் உங்களுக்கு வழங்குகிறோம்" என்று அறிவித்தனர். அதுதான் நமது வரலாறு.

நீங்கள் 2022 ஜூலை மாதம் இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டியதனால், 2024 செப்டெம்பர் 21 ஆம் திகதி, ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க இந்த நாட்டு மக்கள் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளனர். அதற்காக உங்கள் அனைவருக்கும் நான் நன்றி தெரிவிக்கிறேன்."

இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்:

"பொலிஸ் மாஅதிபர் மற்றும் விசேட அதிரடிப்படைத் தளபதி ஆகியோருடன் சிங்கப்பூர் விஜயம் மேற்கொண்டிருந்த போது இவ்வாறானதொரு கட்டளை செயற்பாட்டு மையம் தொடர்பில் எமது கவனம் செலுத்தப்பட்டது. அங்கு, சிங்கப்பூர் அரசாங்கம் அத்தகைய கட்டளைச் செயல்பாட்டு மைய செயல்முறையை விளக்கியது.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு அறிவிக்கப்பட்ட போது, இலங்கையிலும் அவ்வாறானதொ ரு கட்டளைச் செயல்பாட்டு மையம் ஒன்றை ஆரம்பிக்குமாறு அறிவிக்கப்பட்டது. மேலும் அதற்காக இந்த இடம் விசேட அதிரடிப்படையினருக்கு வழங்கப்பட்டது.

பொலிஸ் வரலாற்றில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே பொலிஸாருக்கு அதிக முக்கியத்துவம் வழங்கி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார். கடந்த இரண்டு வருடங்களில் பொலிஸாருக்கான உணவு மற்றும் பராமரிப்பு கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. பயணக் கொடுப்பனவு உயர்த்தப்பட்டது. மேலும் பொலிசாருக்கு 500 புதிய ஜீப் வண்டிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் அனைத்தும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் பின்னணியில் செய்யப்பட்டவை.

இந்த கட்டளைச் செயல்பாட்டு மையம் மூலம் இந்த நாட்டின் தேசிய அமைதியை பாதுகாக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த கட்டளைச் செயல்பாட்டு மையம் எதிர்காலத்தில் பொலிஸ் திணைக்களத்திற்கு கொடுக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்ற பெரும் பங்கு வகிக்கும்"

ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும் , தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க, சிங்கப்பூர் அரசாங்கத்தின் சட்டம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கே. சண்முகம், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் லலித் பதிநாயக்க உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.





**ஜனாதிபதி ஊடகப் பிரிவு...**

# வங்கதேசத்தின் சிற்பி முஜிபுர் ரஹ்மானின் பாரிய தியாகத்தை காலால் நசுக்கிய போராட்டக்காரர்கள்!



பங்களாதேஷில் வன்முறைகள் தொடர்கின்றன. அத்துடன் வங்கதேசத்தின் விடுதலைக்காக தன்னையே அர்ப்பணித்த தந்தை முஜிபூர் ரஹ்மானின் சிலைக்கு நேர்ந்த நிலையை இன்று சமூக ஊடகங்களில் பார்க்க கூடியதாக உள்ளது.

ஷேக் ஹசீனாவின் தந்தை ஷேக் முஜிபுர் ரஹ்மான் பங்களாதேஷ் நாட்டை உருவாக்கியவர். வங்கதேச விடுதலைக்குக் காரணமான தேசத்தந்தை எனப் போற்றப்பட்டவர். ஆனால், வங்கதேசம் விடுவிக்கப்பட்ட சில ஆண்டுகளிலேயே முஜிபுர் ரஹ்மானும் அவரது குடும்பத்தினரும் சொந்த நாட்டு இராணுவத்தினராலேயே படுகொலை செய்யப்பட்டனர்.

அப்போது ஷேக் ஹசீனாவும் ரெஹானாவும் வெளிநாட்டில் இருந்ததால் உயிர்தப்பினர். தற்போது ஷேக் ஹசீனாவும் ரெஹானாவும் சொந்த நாட்டு மக்களின் புரட்சியால் நாட்டை விட்டே தப்பி ஓடும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

தற்போது பங்களாதேஷில் இராணுவத்தின் ஆதரவுடன் இடைக்கால அரசு ஆட்சி புரிகின்றது. பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தனது பதவியை இராஜினாமா செய்த நிலையில், தலைநகரான டாக்காவை விட்டு இந்தியாவுக்குச் சென்று விட்டார்.



பங்களாதேஷில் அனைத்துப் பாடசாலைகள், கல்லூரிகள் மற்றும் பல் கலைக்கழகங்கள் மூடப்பட்டுள்ள நிலையில், சமூகவலைத்தளங்களும் முடக்கப்பட்டுள்ளன.

பங்களாதேஷை விட்டு வெளியேறிய ஷேக் ஹசீனாவும் அவரது சகோதரியும் இந்தியாவில் தங்கியுள்ளனர்.

இந்தக் கலவரம் உண்மையில் மாணவர்களால் நடத்தப்படவில்லை. நாட்டில் உள்ள மதவாதிகளால் தூண்டிவிடப்பட்டுள்ளது என்ற கருத்தும் நிலவுகின்றது. மாணவர்கள் நடத்திய நியாயமான போராட்டங்களில், தடை செய்யப்பட்ட ஜமாத்இஇஸ்லாமி போன்ற குழுக்களுடன் பேகம் கலிதா ஜியாவின் வங்கதேச தேசிய கட்சி (பி.என்.பி ) உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இணைந்து இந்த கலவரத்தை உருவாக்கியுள்ளன என்று சர்வதேச அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர்.

வங்கதேசம் பெருமைகளுடன் திகழ்ந்த மக்களாட்சி நாடு. அந்நாடு தற்போது பற்றி எரிந்து வருகிறது. இயற்கையின் பெரும் வளங்களையும் வீரதீரம்மிக்க வரலாறையும் தன்னகத்தே கொண்டுள்ள தெற்காசிய நாடு அதுவாகும்.

தற்போது வங்கதேசம் வன்முறைகளால் பற்றி எரிந்துள்ளது. இதற்கு காரணம் மாணவர் உரிமைப் போராட்டமே ஆகும். மாணவர் போராட்டத்தால் வெடித்த தாக்குதலும், இதைத் தொடர்ந்த வன்முறையுமே முக்கிய காரணமாகும்.

1971 இல் 'இனி கிழக்கு பாகிஸ்தான் அல்ல, சுதந்திர வங்கதேசம்' என இன்றைய பங்களாதேஷ் விடுதலை அடைந்தது. இந்திய வரைபடத்தில் பார்த்தால், இந்தியாவுடன் சேர்ந்தே இருக்கும் ஒரு மாநிலம் போலவே தெரியும்.

இந்தப் போராட்டத்தை ஆதரித்தது இந்திரா காந்தி தலைமையிலான இந்திய அரசு. விடுதலைப் போருக்காக படைகளை அனுப்பியது. 1971 டிசம்பர் 16 இல் இந்தியா மற்றும் முக்தி பாஹினி கூட்டுப்படைகளின் முன்பு சரணடைந்தார் பாகிஸ்தான் இராணுவ ஜெனரல். இந்தப் போரின் முடிவு, பங்களாதேஷ் என்ற புதிய தேசம் உருவாக வழிவகுத்தது.

இந்தப் போரில் 5 இலட்சம் பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என கணக்கிடப்பட்டது. ஏராளமானோர் காணாமல் போயினர். விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்தோரின் தியாகத்தைப் போற்றும் விதமாக, அவர்களின் சந்ததிகளுக்கு வேலை வாய்ப்பில் 30 வீத இடஒதுக்கீடு வழங்கியது வங்கதேச அரசு. பின்னர் 2018 இல் வெடித்த மாணவர்கள் புரட்சியின் காரணமாக, இந்த இட ஒதுக்கீட்டு முறை ரத்து செய்யப்பட்டது.

நாட்டுக்காக தியாகித்தவர்களை கௌரவிக்கும் வண்ணமே இந்த இட ஒதுக்கீடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனால் இதன் விளைவாக மாணவர்களின் போராட்டங்களால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

வங்கப் பிரிவினையின் பின்னரான புதிய புரட்சி போல தற்போது நிகழ்ந்துள்ளமை வரலாற்றின் புரட்சியல்ல, வெறும் பிறழ்ச்சியாகவே தென்படுகிறது. வங்கதேச தந்தை முஜிபுர் ரகுமானின் உருவச்சிலைக்கு நேர்ந்த நிலையை பார்க்கையில், இந்தப் போராட்டங்களின் பின்னணியில் பாரிய வெளிநாட்டு சக்திகள் உள்ளதோ எனவும் ஐயப்பட வேண்டியுள்ளது.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# எம்.பி.க்களுக்கு புதிதாக ரிப்பீட்டர் ரக துப்பாக்கிகள்

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மேலதிக ஆயுதம் வழங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இவ்வாறு ஆயுதம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் உயிர் மற்றும் உடமைகளை பாதுகாத்துக் கொள்ள இவ்வாறு ரிபீடர் ரக துப்பாக்கி வழங்கப்பட உள்ளது.

ஏற்கனவே இவர்களுக்கு கைத்துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக ரிபீடர் ரக துப்பாக்கிகள் வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு ரிபீடர் ரக துப்பாக்கிகள் வழங்க முடியும் என பாராளுமன்ற பொதுச் செயலாளர் பாதுகாப்பு அமைச்சிடம் அறிவித்துள்ளார்.

ரிபீடர் துப்பாக்கிகளை வழங்குமாறு ஐந்து எம்.பி.க்கள் ஏற்கனவே விண்ணப்பம் செய்துள்ளனர்.

ஏற்கனவே, பாதுகாப்புக்காக வழங்கப்பட்டுள்ள சீன உற்பத்தியான கைத்துப்பாக்கிகள் பழையன என கூறப்படுகின்றது. இவற்றில் சில தற்பொழுது இயங்கக்கூடிய நிலையில் இல்லையென பாதுகாப்பு அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய ரிபீடர் துப்பாக்கிகள் தருவிக்கப்பட்டுள்ளதாகவும், பாராளுமன்ற உறுப்பினர்கள் பணம் செலுத்தி இவற்றைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# 15 மணி நேர உலக சாதனை நிகழ்வு

அமெரிக்கா முத்தமிழ் இலக்கியப் பேரவைக் குழுமங்கள் மற்றும் AMERICA MUTAMIL WORLD RECORD INC. இணைந்து வழங்கும் 78வது இந்தியா சுதந்திர தின விழா மற்றும் அமெரிக்கா முத்தமிழ் இலக்கியப் பேரவைக் குழுமங்களின் நான்காம் ஆண்டு தொடக்கவிழா இன்று 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை10 மணி முதல் முனைவர் ஆரூர் தமிழ்நாடன் முன் னிலையில் அமெரிக்கா முத்தமிழ் இலக்கியப் பேரவைக் குழுமங்களின் நிறுவுநர் தமிழ்மாமணி தாழை இரா. உதயநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அனைவரும் வரவேற்கப்படுகிறார்கள் என இதன் சர்வதேச ஒருங்கிணைப்பாளர் கவிஞர் திருமகள் சிறீபத்மநாதன் தெரிவித்துள்ளார்.

ZOOM LINK:
https://us02web.zoom.us/j/6264919582?pwd=bOZ6bENLUHVEMTIQcUNMUmphcHVHdz09&omn=87481684964
Meeting ID: 626 491 9582
Passcode: 6643.

## ஜனாதிபதித் தேர்தலுக்கான...

முன்வைப்பதற்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்க தெரிவித்தார். கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகள் நேற்று நண்பகல் 12.00 மணியுடன் நிறைவு பெற்றுள்ளது. மொத்தமாக 40 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகள் ஜூலை 26 ஆரம்பமானதுடன் நேற்று நண்பகலுடன் அந்த நடவடிக்கைகள் நிறைவு பெற்றன. அந்த வகையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள 20 அரசியல் கட்சிகளும் மற்றுமொரு அரசியல் கட்சியும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதுடன் 17 சுயாதீன வேட்பாளர்களும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அதே வேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கு தபால் மூலம் வாக்களிப்பதற்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் 4,5,6 ஆகிய தினங்களில் தபால் மூல வாக்களிப்புக்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## எக்ஸத் லங்கா பொதுஜன...

கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான ஜனக ரத்னாயக்கவிடம் 30 மில்லியன் ரூபாவை இலஞ்சமாக கோரியுள்ள விவகாரம் தொடர்பிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## தனிநபர் வருமான வரிக்கு...

நோக்கில் இலங்கையின் உயர் கல்வி முறையில் மாற்றம் ஏற்படுத்தும் வகையில் விரிவான சீர்திருத்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்று முன்தினம் (13) மாலை நடைபெற்ற 'இலங்கையின் உயர் கல்வியை அபிவிருத்தியடைந்த தேசத்திற்கு மாற்றியமைத்தல்' என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் உயர்கல்வியின் தரத்தை உயர்த்தும் வகையில் அரச பல்கலைக்கழகங்களுக்கு சுதந்திரமாக செயற்படும் திறனை வழங்குவதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:

“இந்நிகழ்வில் பங்கேற்பதற்கு முன், நாட்டின் பொருளாதார நிலை குறித்த முக்கிய கலந்துரையாடலில் பங்கேற்றேன். அங்கு வெளிப்படுத்தப்பட்டபடி, எதிர்காலத்தில் சாதகமான சில செய்திகளை செவிமடுப்பீர்கள். வெளிநாடு செல்ல எதிர்பார்க்கும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களை தக்கவைக்கவும் இது உதவும்.

நமது அமைச்சர்கள் காட்டிய திறமையால், முதல் ஆண்டிலேயே நெருக்கடியிலிருந்து மீண்டு வர முடிந்தது. நெருக்கடியில் சிக்கியிருந்த நாட்டின் பொருளாதாரத்தை புதிதாக கட்டியெழுப்பினோம். உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழு, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய தரப்பினர்களுடன் ஏற்கனவே உடன்படிக்கை எட்டியுள்ளோம். அந்த ஒப்பந்தங்களில் பல முன்மொழிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன. அவர்கள் குறிப்பிடும் அளவுகோல்களுக்குள் நாங்கள் செயல்பட வேண்டும்.

உத்தியோகபூர்வ கடன் வழங்கும் குழுவிலுள்ள 17 நாடுகள், சீனா எக்ஸிம் வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி உட்பட மொத்தம் 21 பங்குதாரர்களுடன் உடன்பாடு காணப்பட்டுள்ள பொருளாதார வரையறைகள் தொடர்பிலான பேச்சுவார்த்தைகளுக்கு எங்களுக்கு ஒரு வருடம் ஆனது. இந்த அளவீடுகளை மாற்ற முடியாது.

முதலில், 2025– 2032க்குள் முதன்மை வரவுசெலவுத் திட்டத்தில் 2.3% உபரியாக பேண வேண்டும். தற்போது, நாங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.6% ஆக இருப்பதோடு 2.3% உபரியை இலக்காகக் கொண்டு நமது வரவுசெலவுத் திட்டத்தை தயாரிக்க வேண்டும். 2032 க்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பொதுக் கடன் 95% ஆகக் குறைக்கப்பட வேண்டும். தற்போது 111 வீதமாக அது உள்ளது. 2032 ஆம் ஆண்டில், மொத்த நிதித் தேவைகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 13 சதவீதமாக இருக்க வேண்டும், அதே நேரத்தில் அது தற்போது 27.8 வீதமாக உள்ளது.

அதன்படி, அதை பாதியாக குறைக்க வேண்டும். தற்போதைய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.2% உடன் ஒப்பிடும்போது வெளிநாட்டு கடன் சேவை 1.3% ஆக குறைக்கப்பட வேண்டும். 2025 ஆம் ஆண்டில், வரி வருவாய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14% ஐ எட்ட வேண்டும், அதே நேரத்தில் நாம் தற்போது 9.5% ஆக இருக்கிறோம். மேலும், 2028ம் ஆண்டுக்குள் நமது வெளிநாட்டு கையிருப்பு 15 பில்லியன் டொலர்களாக அதிகரிக்கப்பட வேண்டும். தற்போது எங்களிடம் 5.6 பில்லியன் டொலர்கள் மட்டுமே கையிருப்பு உள்ளது. பணவீக்கம் 5% ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது மற்றும் திறைசேரி பிணையின் அளவு 75% க்கும் குறைவாக இருக்க வேண்டும். இந்த இரண்டு இலக்குகளையும் நாங்கள் ஏற்கனவே அடைந்து விட்டோம்.

மேலும் மூன்று மாதங்களுக்கு மேல் அரசாங்கம் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை செலுத்தாமல் இருக்க முடியாது. மத்திய வங்கிக்கு பணத்தை அச்சிட அனுமதியில்லை. மின்சாரம் மற்றும் எரிபொருளுக்கான இலாபகரமான விலைகள் பேணப்பட வேண்டும். இலங்கை மின்சார சபை அல்லது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் ஏற்படும் எந்தவொரு நட்டத்தையும் திறைசேரிக்கு மாற்றுவதன் மூலம் அதனை ஈடுசெய்ய வேண்டும். சமூகப் பாதுகாப்பிற்காகப் பயன்படுத்தப்படும் நிதிகளுக்கு குறைந்தபட்ச செலவு வரம்புகள் பராமரிக்கப்பட வேண்டும்.ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்பாடுகளின்படி சமூக நலன்புரிப்பயனாளிகளின் எண்ணிக்கையை 16 இலட்சத்தில் இருந்து 24 இலட்சமாக உயர்த்த நடவடிக்கை எடுத்துள்ளோம். நாடு வங்குரோத்தடைந்த காலத்திலும், நாம் முன்பு வழங்கியதை விட அதிகமான சமூக நல உதவிகளை வழங்க முடிந்தது, மேலும் அந்த போக்கை நாம் தொடர வேண்டும். இந்த விதிமுறைகளை மறுபரிசீலனை செய்யவோ அல்லது மாற்றவோ முடியாது .

எங்கள் கடன்வழங்குநர்கள் பத்து பில்லியன் டொலர்கள் வரை கடன் நிவாரணம் வழங்க உடன்பாடு தெரிவித்துள்ளனர். சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தின் ஊடாக எமக்கு மூன்று ஆண்டுகளில் 2.9 பில்லியன் டொலர்கள் கிடைக்கிறது. ஆனால் நாம் செய்துகொண்ட உடன்படிக்கைகளின்படியே நாம் நடக்க வேண்டும். இதற்காகத்தான் பொருளாதார பரிமாற்ற சட்டத்தை கொண்டு வந்தோம்.

இலங்கையை ஏற்றுமதி சார்ந்த மற்றும் போட்டிப் பொருளாதாரமாக மாற்றுவதே எமது இலக்காக இருக்க வேண்டும். இப்போது நாம் வரி வரம்புகள் குறித்து ஆராய்ந்து வருகிறோம். இந்த ஆண்டு வலுவான பொருளாதாரச் செயல்பாடுகளை நாங்கள் பெற்றுள்ளோம், அடுத்த ஆண்டிலும் அதைத் தொடர எதிர்பார்க்கிறோம். மேலும், வரி செலுத்துவோருக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் தனிநபர் வருமான வரி கட்டமைப்பை மாற்றியமைப்பது குறித்து தற்போது பரிசீலித்து வருகிறோம்.

இது தொடர்பில், சர்வதேச நாணய நிதியம் மற்றும் திறைசேரி ஆகியவற்றினால் இரண்டு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 1.2 மில்லியன் வரி இல்லாத எல்லையைப் பராமரிக்கும் அதே வேளையில், வரி எல்லையை 05 இலட்சம் ரூபா முதல் 07 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா வரை பேணி, 36% உயர் வரி விகிதத்தை வைத்திருக்க வேண்டும் என்பதே திறைசேரியின் பரிந்துரையாகும்.

ஆனால் சர்வதேச நாணய நிதியம் வழங்கிய எதிர் முன்மொழிவில் வரியில்லா வரம்பை ரூ. 1.2 மில்லியனாக வைத்திருக்கவும் முதலாவது வரி வரம்பை 5,00,000 ரூபாவிலிருந்த ஒரு இலட்சமாக மாற்றவும் அனைத்து வரி வரம்புகளையும் ரூ. 7,20,000 வினால் உயர்த்தி ஆரம்ப வரம்பை 5,00,000 ரூபாவாக பேணி வரி விகிதம் 36% ஆக குறைக்க வேண்டும். அந்த பரிந்துரைகளை மதிப்பாய்வு செய்து நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். இங்கு நாட்டிற்கும் மக்களுக்கும் மிகவும் சிறந்தது என்பதை கருத்தில் கொண்டு முடிவெடுக்க எதிர்பார்க்கிறோம்.

## தேர்தல் செயலகம் உள்ளிட்ட பகுதிகள்...

நடைமுறைப்படுத்தப்படுவதாக போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர். தேர்தல்கள் செயலகத்தை அண்மித்த பகுதிகள் விசேட பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இக்காலப்பகுதியில் உத்தியோகபூர்வ அல்லது தனிப்பட்ட தேவைகளுக்காக அப்பகுதிக்கு செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க பொதுமக்களிடம் கேட்டுள்ளார். விசேட பாதுகாப்பு வலயம் ராஜகிரிய சரண மாவத்தையை உள்ளடக்கியதாக அமைவதுடன், அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் வாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். இன்றைய தினம் அனைத்து பொது நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்படும் என்பதாலும், அப்பகுதியில் உள்ள அனைத்து அரச அலுவலகங்கள் மற்றும் மருத்துவமனைகள் குறிப்பிட்ட இக்காலப் பகுதியில் மூடப்பட்டிருக்கும் என்பதாலும் பொதுமக்கள் அப்பகுதியை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

வேட்புமனுக்கள் கையளிக்கப்பட்ட எந்தவொரு பேரணி அல்லது ஊர்வலங்களும் அப்பகுதியில் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் வாக்குச் சீட்டுகள் அச்சிடும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும் வேட்பாளர்களுடன் வருகை தரும் பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி வேட்பாளருடன் கட்சியின் செயலாளர் உட்பட இருவருக்கு மாத்திரமே வேட்பு மனு ஏற்பு அலுவலகத்திற்குள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இவர்களைத் தவிர மேலும் மூவர் மட்டும் அலுவலக வளாகத்திற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்...

சபையின் கீழ் செயற்படவுள்ளது. பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிர்வாக சபையின் பிரதம ஆலோசகராக புதிய கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்தி தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா, ஆலோசகராக முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜோன் செனவிரத்ன, செயலாளராக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, பொருளாளராக இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க, தேசிய அமைப்பாளராக முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க மற்றும் அமைச்சர் நளின் பெர்னாண்டோ ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிமல் சிறிபால டி சில்வா, டக்ளஸ் தேவானந்தா, மஹிந்த அமரவீர, துமிந்த திசாநாயக்க,லசந்த அழகியவன்ன, பைசர் முஸ்தபா, சுசில் பிரேம ஜயந்த ஜோன் செனவிரத்ன, நிமல் லான்சா, பிரியங்கர ஜயரத்ன, நளின் பெர்னாண்டோ, எஸ்.எம்.எம்.முஷாரப், எஸ் எஸ். வியாழேந்திரன் உள்ளிட்ட பலரும் மேற்படி கூட்டணியில் இணைந்து கொண்டுள்ளனர்.

மேற்படி கூட்டணியின் உத்தியோகபூர்வ People’s Alliance என்ற இணையதளம் ஒன்றும் நேற்றைய தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## சம்பள அதிகரிப்பு ரூபா 1700...

சம்பளம் 1,350 ரூபாவாக வேண்டும் என்றும், அந்த சம்பளம் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகிய கொடுப்பனவுகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்றும் அந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக உற்பத்தித்திறன் அடிப்படையில் ஊக்குவிப்புத் தொகையாக 350 ரூபா வழங்கப்பட வேண்டும் என்றும் வர்த்தமானி குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, இறப்பர் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளமும் 1,700 ஆக அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த முன்மொழிவுகள் தொடர்பான ஆட்சேபனைகள் மற்றும் ஆட்சேபனைக்கான காரணங்களின் அறிக்கையுடன் எதிர்வரும் (28) நண்பகல் 12 மணிக்கு முன்னர் தமக்கு அனுப்பி வைக்குமாறும் சம்பளக் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் இந்த வர்த்தமானி மூலம் கேட்டுள்ளார்.

## தேர்தலில் யாரை ஆதரிப்பது...

தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு நேற்றைய தினம் கருத்து தெரிவித்த அவர், இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்; ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பான விடயங்களை பல தரப்பினருடனும் ஆராய்ந்து வருகின்றார்.

2022 டிசம்பரில் சகல கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை ஆரம்பித்த வேளை, அவருக்கு நான்,வழங்கிய ஆவணத்திலிருந்து தொடர்ச்சியாக பல ஆவணங்கள் கைமாற்றப்பட்டுள்ளன. இந்நிலையில், இப்பொழுது அவர் ஒரு ஆவணத்தை வழங்கியுள்ளார். நேற்று முன்தினம் அதே ஆவணங்களை வேறு சில தமிழ் கட்சிகளுக்கும் அவர் வழங்கியுள்ளார். எமது கட்சித் தலைவரிடமும் அதை கையளித்துள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பங்களாதேஷ் பிரதமருக்கு...

தெரிவித்துக்கொண்டார். பங்களாதேஷின் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு பிரதமர் யூனுஸால் முடியுமென்று தான் நம்புவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பங்களாதேஷிலுள்ள இலங்கை முதலீட்டாளர்களை அங்கு தொடர்ந்து தங்கி முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கவுள்ளதாகவும் பங்களாதேஷின் புதிய பிரதமருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். பங்களாதேஷ் பொருளாதார ரீதியில் அபிவிருத்தியடைய இலங்கையால் முடிந்த சகல வழிகளிலும் உதவுவதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

## அரச ஊழியரின் சம்பள அதிகரிப்பு...

நிலை என்வற்றைக் கவனத்தில் கொண்டு இந்த அறிக்கையை இக்குழு தயாரித்துள்ளது. வரிகளை குறைத்து சம்பளத்தை அதிகரிக்க போவதாக எதிர்க்கட்சிகள் கூறுபவற்றை ஆராய வேண்டும் என்றார்.

## மன்னார் மருதமடு அன்னையின்...

குறித்து அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று (15) வியாழக்கிழமை மடு அன்னையின் ஆவணி மாத திருவிழா நடைபெறுகிறது. வழமை போல் திருவிழா திருப்பலி இன்று காலை 6.15 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும். ஆவணி திருவிழாவை முன்னிட்டு வழமை போல் போக்குவரத்து, பாதுகாப்பு, நீர் வசதிகள், மின்சார வசதி,உரிய முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# இன்றைய பலன்கள்
## (15.08.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
எதிர்பார்க்கும் லாபம் குறையும். அவசர காரியங்களை முன்னிட்டு பணியாளர்களின் ஒத்துழைப்பை நாடுவீர்கள்.

**ரிஷபம் :**
சொந்தத் தொழிலில் புதிய வாடிக்கையாளர்களின் அவசரப் பணியை விரைவாக செய்து கொடுக்க ஓய்வின்றி உழைப்பீர்கள்.

**மிதுனம்:**
சக பணியாளர் மத்தியில் உங்கள் செல்வாக்கு உயரும். சொந்தத் தொழிலில் வேலைப்பளு அதிகரிப்பதால் ஓய்வின்றி உழைக்க வேண்டியது இருக்கும்.

**கடகம்:**
நிலுவையில் இருக்கும் பணத்தை வசூலிக்க முற்படுவீர்கள். கூட்டத்தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கலாம்.

**சிம்மம்:**
சொந்த தொழிலில் முன்னேற்றமான போக்கை சந்திப்பீர்கள். புதிய வாடிக்கையாளர்களின் வருகையும் அவர்களால் பொருளாதார முன்னேற்றமும் ஏற்படும்.

**கன்னி:**
சொந்தத் தொழிலில் லாபகரமான வியாபாரம் இருக்கும். புதிய வாடிக்கையாளர்களால் லாபம் அதிகரிக்கும். கூட்டுத் தொழிலில் நல்ல லாபகரமான வியாபாரம் இருக்கும்.

**துலாம்:**
எப்படியும் முடிந்து விடலாம் என்று நம்பிய காரியம் ஒன்று காரணம் இல்லாமல் தள்ளி போகலாம். சொந்தத் தொழிலில் வேலை அதிகரித்தாலும் போதுமான வருமானம் கிடைக்காது.

**விருச்சிகம்:**
சொந்த தொழிலில் புதிய வாடிக்கையாளர்கள் மூலம் பொருளாதாரம் முன்னேற்றம் ஏற்படக்கூடும். கூட்டுத் தொழிலில் வியாபாரம் சுமாராக நடந்தாலும் வளக்கமான லாபம் குறையாது.

**தனுசு:**
எதையும் கவனத்துடன் செய்வது அவசியம். கூட்டுத் தொழில் வியாபாரம் நன்கு நடைபெறும். ஆனாலும் போதுமான லாபம் கிடைக்காது.

**மகரம்:**
சொந்த தொழில் செய்பவர்கள் புதிய வாடிக்கையாளர்களால் பொருளாதார முன்னேற்றத்தை அடைவீர்கள். கூட்டுத் தொழில் செய்பவர்கள் புதிய யுக்திகளை கையாண்டு வியாபாரத்தை பெருக்குவீர்கள்.

**கும்பம்:**
வரவேண்டிய பணம் வந்து சேரும். குடும்பம் சீராக நடைபெறும். சிறு சிறு பிரச்சனைகள் ஏற்பட்டு சமாளிக்கப்படும். கடன் தொல்லைகள் இருக்காது.

**மீனம்:**
சொந்த தொழில் சுறுசுறுப்பாக நடந்தாலும் எதிர்பார்க்கும் ஆதாயம் தள்ளி போகலாம். கூட்டுத் தொழில் வியாபாரத்தில் குறைவில்லாத லாபம் ஏற்படும்.

## சர்வதேச தொடர்புகள்... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் குழுவின் தலைவராக செயறபட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ அந்தக் குழுவின் உறுப்பினர் மற்றும் தலைமைப் பதவியிலிருந்து இராஜினாமா செய்தார். இதையடுத்து தலைவர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு 2024.08.08 ஆம் திகதி இந்தத் தெரிவு மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கூட்டத்தில் குழுவின் உறுப்பினர்களான யதாமினி குணவர்த்தன மற்றும் பாராளுமன்ற சட்டவாக்க சேவைகள் பணிப்பாளரும் தொடர்பாடல் திணைக்கள பதில் பணிப்பாளருமான எம். ஜயலத் பெரேரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தாய்லாந்து பிரதமர்... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாய்லாந்தின் சமகால அரசாங்கத்தை மேலும் அரசியல் நிச்சயமற்ற நிலைக்கு தள்ளும் ஒரு அதிர்ச்சியான முடிவாக இது அமைந்துள்ளதாக, அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

67 வயதான ஸ்ரேத்தா, ஓராண்டுக்கும் குறைவான காலமே ஆட்சியில் இருந்தார். 16 ஆண்டுகளில் இதே நீதிமன்றத்தால் நீக்கப்பட்ட மூன்றாவது பிரதமர் இவரென தெரிவிக்கப்படுகிறது.

புதிய பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்காக தாய்லாந்து பாராளுமன்றம் கூடும் வரை, அவருக்குப் பதிலாக இடைக்காலத் தலைவர் நியமிக்கப்படுவாரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தாண்டு நடைபெற்ற தேர்தலில் அதிக தொகுதிகளில் வெற்றி பெற்ற நாட்டின் பிரபலமான முற்போக்கு கட்சியின் அரசாங்கத்தை, நீதிமன்றம் கலைத்து ஒரு வாரத்துக்குப் பிறகு அரசியலமைப்பை மீறியதாக இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இதன் தலைவர்களுக்கு அரசியலில் ஈடுபட 10 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பேங்கொக்கிலுள்ள அரசியலமைப்பு நீதிமன்றம் புதன்கிழமை இந்த தீர்ப்பையளித்தது.

ரியல் எஸ்டேட் அதிபரும், உறவினருமான சிறைவாசம் அனுபவித்த ஒரு சட்டத்தரணியை அமைச்சரவையில் நியமித்ததன் மூலம், அரசியல் நெறிமுறை விதிகளை இவர் மீறியுள்ளதாக நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

## இராமேஸ்வரம் மீனவர்கள்... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை கடற்படையினரின் கைது நடவடிக்கைகள் அதிகரித்து வருவதால், தமிழக மீனவர்களை அறிவுறுத்தும் கூட்டத்தை இந்திய கடற்படையினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடலுக்குச் செல்லும் மீனவர்கள், இந்திய கடல் எல்லையை தாண்டி மீன்பிடிக்க செல்லக்கூடாது. கடலுக்குள் செல்லும் மீனவர்கள் ஆதார் நகல், மீனவர் அடையாள அட்டை ஆகியவற்றை எடுத்துச் செல்ல வேண்டும். கடலுக்குச் செல்வதற்கான அனுமதி டோக்கனை கட்டாயம் வாங்கிக் கொண்டு செல்ல வேண்டும்” என வலியுறுத்தப்பட்டது.

## ஜனக ரத்நாயக்க நேற்று... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

சார்பில் தேர்தலில் போட்டியிடவுள்ளதுடன், அக் கட்சியி ன் செயலாளர் நிஹால் பிரேம குமார தேசப்பிரிய நேற்று ஜனக ரத்நாயக்கவுக்கான கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளார்.

ஜனக ரத்நாயக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவராக சில காலம் பணியாற்றியுள்ளதுடன் மின்சாரக் கட்டணம் தொடர்பான சர்ச்சைகளில் பேசப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இரண்டாம் தவணை...

தனியார் பாடசாலைகளுக்கு இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகள் நாளை (16) வெள்ளிக்கிழமை நிறைவடையவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அதே வேளை,மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக மேற்படி பாடசாலைகள் எதிர்வரும் ஆகஸ்ட் (26) ஆரம்பிக்கப்படும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

## நாட்டிலிருந்து கடத்தப்பட்ட...

இதையடுத்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினரே, தங்கத்தை பறிமுதல் செய்தனர்.அங்கு காரில் வந்த 02 பேரிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தியபோது, அவர்கள் முன்னுக்குப்பின் முரணான தகவல்களை தெரிவித்துள்ளனர். இதையடுத்து அதிகாரிகள் அந்த காரை சோதனை செய்து, அதிலிருந்த 6.6 கிலோ தங்கத்தை பறிமுதல் செய்தனர்.




# தோட்டத் தொழிலாளர்களின் அவலங்களை வீதி நாடகமாக அரங்கேற்றிய மாணவர்கள்

(மஸ்கெலியா நிருபர்)





தோட்டத் தொழிலாளர்களின் அவல நிலைமைகள் தொடர்பாக பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில், தலவாக்கலை பாடசாலை/நடைமுறைக் கல்லூரி மாணவர்களின் ஏற்பாட்டில் ஹட்டனில் நேற்று (14) வீதி நாடகமொன்று அரங்கேற்றப்பட்டது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த பாடசாலையின் அதிபர் டொமினிக் சந்தனம்,

தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் கடந்துள்ள போதிலும், அவர்களின் சில குடும்பங்கள் இன்றும் பட்டடிக்குள் அடைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தற்போது நிலவும் பொருளாதாரப் பிரச்சினையினால் தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும், பெருந்தோட்டப் பிள்ளைகள் பலர் தமது குடும்பப் பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கில் தமது கல்வியை இடைநிறுத்திவிட்டு, கொழும்பு போன்ற வெளி பிரதேசங்களுக்கு தொழிலுக்காகச் செல்கின்றனர். இதனை மக்களுக்கு உணர்த்தும் வகையிலேயே இந்த வீதி நாடகங்கள் அரங்கேற்றப்பட்டதாக பாடசாலையின் அதிபர் மேலும் தெரிவித்தார்.



சர்வதேச ஹொக்கி சம்மேளனம் மற்றும் ஆசியா ஹொக்கி சம்மேளனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் சர்வதேச ரீதியில் ஒரு கோடி மரக்கன்றுகள் நடும் வேலை திட்டத்தின் கீழ், மாத்தளை நந்தமித்திர சர்வதேச ஹொக்கி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற மரக்கன்று நடுகை நிகழ்வில், விளையாட்டு துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோகண திசாநாயக்க மரக்கன்று ஒன்றை நட்டு வைப்பதை படத்தில் காணலாம்.

(மாத்தளை சுழற்சி நிருபர்)

## சமாதான நீதவானாக கருப்பையா கோபு

நுவரெலியாவைச் சேர்ந்த கோபுசாமி என அழைக்கப்படும் கருப்பையா கோபு, அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.



நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி பிரபுதிகா லங்காங்கனி முன்னிலையில் நேற்று முன்தினம் (13) அவர் சத்தியப்பிரமாணம் செய்துக் கொண்டுள்ளார்.

கந்தப்பளை மெதடீஸ்ட் கல்லூரியின் பழைய மாணவரான இவர், நுவரெலியா ஹோட்டபீல்ட் ட்ரைவ் ஆங்கில பாடசாலையின் ஆங்கில பட்டதாரி மாணவராவார்.

மேலும், கந்தப்பளையில் இயங்கி வரும் கோபு கல்வி நிறுவனத்தின் உரிமையாளரும் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆ.ரமேஸ்**

# நோர்வூட் பாடசாலை அதிபருக்கு எதிராக பெற்றோர் ஆர்ப்பாட்டம்

### உரிய விசாரணைக்கு இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் பணிப்பு

பொகவந்தலாவை நிருபர்



நோர்வூட், சென்ஜோன் டிலரி தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் விவகாரம் தொடர்பாக, உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு, அது தொடர்பான அறிக்கையை கல்வி அமைச்சுக்கு சமர்பிக்குமாறு, மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் செயலாளருக்கு, கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஹட்டன் கல்வி வலயத்துக்குட்பட்ட நோர்வூட் சென்ஜோன் டிலரி தமிழ் வித்தியாலயத்தின் அதிபரை உடனடியாக வெளியேற்றுமாறும், முறையான அதிபர் ஒருவரை நியமிக்குமாறும் வலியுறுத்தி பெற்றோர் நேற்று (14) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பதாகைகளை ஏந்தி, கோஷங்களை எழுப்பியவாறு சுமார் 300கும் மேற்பட்ட பெற்றோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, பாடசாலைக்கு முறையான அதிபர் ஒருவரை நியமிக்குமாறும், அவ்வாறு நியமிக்கபடாவிட்டால் போராட்டம் பாரிய போராட்டமாக உருவெடுக்குமெனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக கருத்து தெரிவித்த கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார், நோர்வூட் சென்ஜோன் டிலரி தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் விவகாரம் தொடர்பாக தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட பெற்றோர், முறைப்பாடொன்றை முன்வைத்ததாகவும் மாணவர்களின் எதிர்காலம் குறித்து உடனடியாக விசாரணையை ஆரம்பிக்குமாறும் மத்திய மாகாண கல்வி திணைக்களத்தின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# வறக்காமுர பகுதியில் ஐ.தே.க வின் பிரசார அலுவலகம் திறந்து வைப்பு





(மாத்தளை சுழற்சி நிருபர்)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசார அலுவலகமொன்று அண்மையில் உக்குவெல்ல, வறக்காமுர பகுதியில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி தேர்தலுக்காக போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மாத்தளை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான அமைப்பாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான உஜீத் அனுராத இந்த அலுவலகத்தை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் உக்குவளை பிரதேச சபையின் முன்னாள் உப தலைவர் நகீர் மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

2022/ 2023 ஆண்டுகளில் ஏல விற்பனையில் தோட்டக் கம்பனிகளுக்கு 104 பில்லியன் ரூபா வருமானம்

# இலாபம் இல்லையென காரணம் கூறி சம்பளத்தை அதிகரிக்காமலிருப்பதை ஏற்க முடியாது

### இலங்கை தொழிலாளர் செங்கொடிச் சங்கம்

(அக்குறணை குறூப் நிருபர்)

சம்பள அதிகரிப்பு வழங்க தேயிலைத் தோட்டங்கள் போதியளவு இலாபம் ஈட்டவில்லை எனக் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என இலங்கை தொழிலாளர் செங்கொடிச் சங்கம் தெரிவித்துள்ளது.

தேயிலைச் சபையின் அறிக்கையின்படி, 2022/ 2023 ஆம் ஆண்டுகளில் தேயிலை ஏல விற்பனையில் 104 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக, இலங்கை தொழிலாளர் செங்கொடிச் சங்கத்தின் ஆலோசகரும் முன்னாள் பொதுச் செயலாளருமான மேனகா கந்தசாமி தெரிவித்துள்ளார்.

கண்டி ஹீரசகலயில் அமைந்துள்ள தலைமை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை தெரிவித்த அவர்,

தேயிலை சபையின் அறிக்கையின் படி, தேயிலை ஏற்றுமதி 55 வீதம் அதிகரித்துள்ளதாகவும் அதன் மூலம், 140 பில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே நட்டம் என்ற கருத்துக்கு அங்கு இடமில்லை. தற்போது அறிவிக்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்பானது, தோட்டத் தொழிலாளர்களது ஒரு நாள் சம்பளம் 1350 ரூபா ஆகும். உற்பத்திக்கு ஏற்ற கொடுப்பனவு 350 ரூபா ஆகும். இவை இரண்டும் சேர்ந்தே 1700 ரூபா கொடுப்பனவாக கணக்கிடப்படுகிறது.

ஆனால், இலங்கை தொழிலாளர் செங்கொடிச் சங்கம், அடிப்படை சம்பளமாக 1700 ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தது.

# கண்டியில் சீன கலாசார கண்காட்சி





இலங்கை சீன கலாசார ஒத்துழைப்பு கழகமும் இலங்கையிலுள்ள 11 பாடசாலைகளும் இணைந்து சீன கலாசார கண்காட்சி ஒன்றை, கண்டி கிங்ஸ்வூட் கல்லூரி கேட்போர் கூடத்தில் அண்மையில் நடத்தியிருந்தது.

சீனாவின் கல்வி, கலாசார, பொருளாதார, விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் சீன எழுத்துக்கலை தொடர்பான கண்காட்சிகள் இங்கு இடம்பெற்றன.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக இலங்கைக்கான சீனத் தூதரக கவுண்சிலர் ஜீ.லிலி கலந்து கொண்டார்.

இதன்போது, கலாநிதி சாங் மிங், கடதாசித் துண்டுகளால் மேற்கொள்ளப்படும் நிர்மாணங்கள் பலவற்றை செய்து காட்டியமையும் குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐ.ம.ச.வின் நாடளாவிய ரீதியில் 100 தேர்தல் கூட்டங்கள்

### ஐக்கிய மக்கள் சக்தி



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காக நாடு முழுவதும் 100 தேர்தல் கூட்டங்களை நடத்த உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் (13) நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ள அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமஸாசவின் வெற்றிக்கான முதலாவது உத்தியோகபூர்வ தேர்தல் பிரசாரக் கூட்டம் இம்மாதம் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் குருநாகல் சத்தியவாதி மைதானத்தில் இடம்பெறவுள்ளதுடன், எமது கட்சி இவ்வாறு நாடளாவிய ரீதியாக 100 தேர்தல் பிரசார கூட்டங்களை நடத்தவுள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான தேர்தல் பிரசாரக் கூட்டம் உத்தியோகபூர்வமாக எதிர்வரும் ஆகஸ்ட் 16 ஆம் திகதியே ஆரம்பித்து வைக்கப்படும். அதேநேரம் சுமார் 400 நடுத்தர அளவிலான கூட்டங்களையும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், ஜனாதிபதி தேர்தலுடன் இணைந்து பல்வேறு வகையான நிகழ்ச்சிகளை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# மொனராகலையில் விபத்து; ஒருவர் படுகாயம்

ஊவா சுழற்சி நிருபர்

மொனராகலையில், சிறைச்சாலை பஸ்ஸொன்றும் பால் ஏற்றிச் சென்ற பௌசர் ஒன்றும், ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மொனராகலை பிபில பிரதான வீதியின் தம்வத்த பகுதியில் நேற்று(14) இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் படுகாயமடைந்த சிறைச்சாலை பஸ்ஸின் சாரதி மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் விபத்துக்குள்ளான இரு வாகனங்களும் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மொனராகலை பொலிஸார் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காணாமல் போன இளைஞன் சடலமாக மீட்பு

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று (14) மீட்கப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

தலவாக்கலை மேற்பிரிவைச் சேர்ந்த 24 வயதுடைய, டி.மதுஸான் என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் கடந்த 12 ஆம் திகதியிலிருந்து காணாமல் போயுள்ள நிலையில்,நேற்று முன்தினம் (13) தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் உறவினர்களால் முறைபாடளிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந் நிலையில், மேல் கொத்மலை நீர்தேக்கத்தில் சடலமொன்று மிதந்து கொண்டிருப்பதை அவதானித்த பிரதேசவாசிகள், தலவாக்கலை பொலிஸாருக்கு வழங்கிய தகலுக்கமைய, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், சடலத்தை மீட்டுள்ளதுடன், பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கள் 2024.08.13
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5564 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.23,219,624.00
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 6 7 4 4 6 9

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 139 — ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 4 4 6 9

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3806 — சீட்டிழுப்பு திகதி 2024.08.13 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.69,832,505.12
ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 18 29 74 76 — விசேட எழுத்து N — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 41354

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1912 — 2024.08.13 — 05158 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.441,841,542.00
ஆங்கில எழுத்து E — சுப்பர் இலக்கம் 13 — வெற்றி இலக்கங்கள் 01 17 36 80
அடுத்த டபள் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.08.13 — சீட்டிழுப்பு இலக்கம் 0390
ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 3 7 2 2 6 1
L7 எழுத்து H
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.34,290,318.88

ராசி சுப பலன் — திகதி 2024.08.13 — சீட்டிழுப்பு இலக்கம் 873 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,752,213.20
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 19 26 29 60 — தனயோக இலக்கம் 16271 — நாளுக்கான விதி எண் 01

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1594 — 2024.08.13 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.106,203,193.84
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 02 10 47 55 — விசேட எழுத்து K — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 42036

# கிழக்கின் குரல்



## சுற்றுலா பயணிகளை கவரும் நோக்கில் மட்டக்களப்பு நகரில் வேலைத்திட்டம்

**மட்டக்களப்பு விசேட நிருபர்**



உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் நோக்கில் மட்டக்களப்பு நகரின் கேந்திர முக்கியத்துவம் மிக்க பிரதேசங்களை துப்புரவு செய்யும் இரு நாள் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சுற்றாடல் அமைச்சின் ஆலோசனைக்கமைய கிழக்கு மாகாணத்தில் கேந்திர முக்கியத்துவம் மிக்க இடங்களை துப்புரவு செய்து அழகுபடுத்தவும் டெங்கு நுளம்புகள் பெருகும் சுற்றாடலை துப்புரவு செய்யவும் இராணுவத்தினரிடம் இவ்வேலைத்திட்டம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிலையில் இரு நாள் கொண்ட துப்புரவு பணி நேற்று புதன்கிழமையுடன் நிறைவுற்றது.

கல்லடி 243ஆவது படைப்பிரிவின் இராணுவ கட்டளை அதிகாரி பிரிகேடியர் குமாரசிங்க சுத்திமா தலைமையில் குருக்கள்மடம் சிங்க ரெஜிமன்ட் பிரிவைச் சேர்ந்த மேஜர் ரணில் பலேகலவின் வழிகாட்டலுக்கமைய கடந்த இரு நாட்களும் 75 இராணுவத்தினர் பணிக்கு அமர்த்தப்பட்டு துப்புரவு பணி முன்னெடுக்கப்பட்டது.

ஆற்றங்கரைகளை துப்புரவு செய்தல், டெங்கு நுளம்புகள் பரவுவதை தடுத்தல், தேவையற்ற பாரிய விளம்பர பதாதைகளை அகற்றல், காந்தி பூங்கா மற்றும் செழியன் பூங்காக்களிலுள்ள மரங்களின் கிளைகளை அகற்றல், தேவையற்ற தாவரங்களை அகற்றல் ஆகிய துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட கழிவுகள், மட்டக்களப்பு மாநகர சபையின் கழிவு அகற்றும் வாகனங்கள் மூலம் திருப்பெருந்துறை கழிவு முகாமைத்துவ நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

## இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்து; இளைஞர் பலி

**மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**



மட்டக்களப்பின் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதான வீதியில் நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதுடன், இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

காத்தான்குடி பிரதான வீதியில் மீரா பாலிகா மகளிர் கல்லூரிக்கு முன்பாக இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளாகின.

மோட்டார் சைக்கிளை செலுத்திய 20 வயதுடைய சஹ்ரான் முஹம்மது சமல்கானே விபத்தில் உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்தில் அமர்ந்து பயணித்த இளைஞர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதன்போது மற்றுமொரு மோட்டார் சைக்கிளை செலுத்தியவரும் இவ்விபத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளை செலுத்திய இளைஞரும் அம்மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்தில் அமர்ந்து மற்றைய இளைஞரும் பயணித்தமை பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த விபத்து தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

## அச்சு பிரதியாக மின் கட்டண பட்டியல் வழங்க வேண்டுகோள்

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**

இலங்கை மின்சார சபையின் மின் பாவனையாளர்களுக்கு மாதாந்த மின் கட்டண பட்டியலின் அச்சுப் பிரதியை ஏற்கெனவே போன்று வழங்குமாறு, அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச மின் பாவனையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். பாவனைக்குரிய மின் கட்டண விபரத்தை கையடக்க தொலைபேசிக்கு குறுந்தகவல் மூலமாக அனுப்புவதால் மாதாந்த மின் கட்டணத்தை செலுத்துவதில் தாம் சிரமத்தை எதிர்கொள்வதாகவும், அப்பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக மானி வாசிப்பாளர் வீடு வந்து மின் வாசிப்பை கணக்கெடுத்த போதிலும், தமக்கு மாதாந்த மின் கட்டண பட்டியல் விபரம் அச்சுப் பிரதியாக வழங்கப்படாமல், தமது கையடக்க தொலைபேசிக்கு குறுந்தகவல் மூலமாக கட்டண விபரம் அனுப்பப்படுவதாகவும் இதனால் தாம் சிரமத்தை எதிர்கொள்வதாகவும், அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## மண்முனையில் பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவி வழங்கிவைப்பு



மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 58 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகளை இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் வழங்கி வைத்தார். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மகளிர் அணி செயலாளர் சுசிகலா அருள்தாஸ் தலைமையில் த.ம.வி.பு. கட்சித் தலைமை காரியாலயத்தில் வைத்து இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

இதன்போது தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கான அனுமதி கடிதங்களை இராஜாங்க அமைச்சர் வழங்கி வைத்தார். இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் பன்முகப்படுத்தப்பட்ட 103 மில்லியன் ரூபாவில் மட்டக்களப்பில் பல்வேறு அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படும் நிலையில், மண்முனை வடக்குக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 10 மில்லியன் ரூபா செலவில் விளையாட்டுக்கழக விளையாட்டுத்துறைசார் பயிற்சி நிலையங்களுக்கு உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. சுயதொழில்களை முன்னெடுப்பதில் வளபற்றாக்குறையை எதிர்கொண்டவர்களுக்கு உபகரணங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

## சிறுவர் நலனுக்கான வாழ்வாதார உதவி

**கிண்ணியா தினகரன் நிருபர்**

சிறுவர் இல்ல அனுமதிக்கு கோரிய இரண்டு குடும்பங்களுக்கு சிறுவர் நலனுக்கான வாழ்வாதார உதவி CERI நிறுவனத்தின் அனுசரணையுடன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கிண்ணியா பிரதேச செயலக வளாகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி இந்த உதவியை வழங்கி வைத்தார்.

சிறுவர் இல்ல அனுமதிக்கு விண்ணப்பித்த சிறுவர்களை அவர்களது குடும்ப சூழலில் வைத்து பராமரிக்கும் பொருட்டு அவர்களுக்கு இந்த உதவி வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது நிர்வாக உத்தியோகத்தர், கிளை தலைவர்கள், மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், CERI நிறுவன உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு உத்தியோகத்தர்கள் பங்கேற்று இந்த உதவிக்கு ஒத்தாசை புரிந்தனர்.

## பெரும்போக நெற்செய்கை; விவசாய கூட்டத்தில் ஆராய்வு

**கிண்ணியா மத்திய நிருபர்**

2024/ 2025ஆம் ஆண்டுக்கான பெரும்போக நெற்செய்கை தொடர்பாக திருகோணமலை மாவட்ட விவசாய குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

திருகோணமலை மாவட்ட விவசாய குழுக் கூட்டம் அம்மாவட்ட அரசாங்க அதிபர் சமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த விவசாய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் தொடர்பாகவும் திருகோணமலை மாவட்டத்தின் விவசாயத்துறை சார்ந்த பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது. இந்தக் கூட்டத்தில் திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன், மாவட்ட செயலக விவசாயப் பணிப்பாளர் ரி.கருணைநாதன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கே.விஜயதாசன், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், விவசாய அமைப்பின் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## அ.இ.ம.கா.வின் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினர் கூட்டம்



**பாலமுனை தினகரன் நிருபர்**

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினர்களுக்கான கூட்டம் அட்டாளைச்சேனை ஸக்கி மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

மேற்படி கட்சியின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் ஏ.கே. அமீரின் ஏற்பாட்டில் நடைபெற்ற கூட்டத்தில் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சமகால அரசியல் தொடர்பாக விளக்கமளித்தார்.

அம்பாறை மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலிருந்தும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள், புத்திஜீவிகள், கல்வியாளர்கள், உட்பட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.அமீர் அலி, மாகாண சபை உறுப்பினர்களான ஐ.எல்.எம்.மாஹீர், ஜவாத், பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர்களான எம்.ஏ.அன்சில், அஸ்ரப் தாஹிர், பிரதி தவிசாளர் தாஜுதீன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## வீரமுனை சம்பவத்தின் நினைவுதின நிகழ்வு



**காரைதீவு குறூப் நிருபர்**

வீரமுனை படுகொலை நினைவுதின நிகழ்வு கடந்த திங்கட்கிழமை வீரமுனை சிந்தாயாத்திரை பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெற்றது.

இதன்போது 34ஆவது வருட நினைவுதின நிகழ்வே நடைபெற்றது.

வீரமுனை கண்ணகை அம்மன் ஆலய தர்மகர்த்தா பூ.பரமதயாளன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சோ.புஷ்பராஜா, காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கி.ஜெயசிறில், ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள், பிரதேச மக்களாகிய பலரும் கலந்து கொண்டனர்.

## மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் வைபவம்



**மணல்சேனை நிருபர்**

தி /மூ /மல்லிகைத்தீவு மகா வித்தியாலயத்தின் மாணவ தலைவர்களுக்கு உத்தியோகபூர்வமாக சின்னம் சூட்டும் நிகழ்வு அவ்வித்தியாலய அதிபர் கணேஷின் தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது மேற்படி வித்தியாலயத்துக்கு உரித்தான சத்தியப்பிரமாண உறுதியுரையுடன் வித்தியாலயத்தின் இலட்சினை மாணவர்களுக்கு சின்னமாக சூட்டப்பட்டது.

சிரேஷ்ட மாணவத் தலைவர்கள், உதவி சிரேஷ்ட தலைவர்கள் உட்பட 27 பேருக்கு கடமைகள் பொறுப்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோராகிய பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## கோணாவத்தை ஆற்றுக்கு ஒதுக்கப்பட்ட காணியை பாதுகாக்க வேண்டுகோள்

**ஒலுவில் விசேட நிருபர்**

அட்டாளைச்சேனை, கோணாவத்தை ஆற்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அரச காணியை சட்டவிரோதமாக பிடிப்பதை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இக்காணியை சட்டவிரோதமாக பிடிப்பதை தடைசெய்ய அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கடந்த 5 மாதங்களுக்கு முன்னர் எடுத்த தீர்மானத்துக்கமைய இதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனவும், பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆற்றின் இரு மருங்குகளிலும் அடையாளம் காணப்பட்டுள்ள இந்த அரச காணியில் கிழக்கு மாகாண காணி ஆணையாளரால் 'இது அரச காணி நுழைவது தடை செய்யப்பட்டுள்ளது' என்று பொறிக்கப்பட்ட பலகைகள் இடப்பட்டிருந்தாலும், இதை உதாசீனம் செய்து காணிகளை சுவீகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஆயினும் இவ்வாறு பிடிக்கப்பட்டுள்ள அரச காணியில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாதெனவும் இக்காணிக்கு மின்சாரம், குடிநீர் இணைப்புகளை பெற முடியாதெனவும், மாவட்ட அரசாங்க அதிபரால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ மாவட்ட பிரதி பணிப்பாளர் எம்.ஏ.சீ. எம்.றியாசிடம் வினவிய போது, மாவட்ட ஒருங்கிணைப்பு அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் எடுத்த தீர்மானத்தை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்நிலையில் பிராந்திய நீர்ப்பாசன பணிப்பாளர், கரையோரம் பேணல் திணைக்கள பொறியியலாளர், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர், நீர்ப்பாசன பணிப்பாளர், நில அளவை திணைக்கள பணிப்பாளர், அனர்த்த முகாமைத்துவ மாவட்ட பிரதி பணிப்பாளர் ஆகியோர் நேரடியாக களவிஜயம் செய்து அவ்விடத்தை பார்வையிட்டனர்.

## கல்முனையில் நிறுத்தல் அளவை கருவிகளுக்கு முத்திரை இடல்



**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரை இடும் பணி கல்முனை பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 2024/2025ஆம் ஆண்டுக்குரிய இந்தத் திட்டமே முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், கல்முனை பிரதேச செயலகத்தில் நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரை இடப்பட்டு வருகின்றன.

அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவை உத்தியோகத்தர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டு நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரை இட்டு வருகின்றனர்.

## அல் முனீரா பெண்கள் உயர் பாடசாலையில் சின்னம் சூட்டல்



**பாலமுனை தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று வலய கல்வி அலுவலகத்துக்குட்பட்ட அட்டாளைச்சேனை அல் முனீரா பெண்கள் உயர் பாடசாலையில் மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டுதல் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகள் அப்பாடசாலையில் நடைபெற்றன.

மேற்படி பாடசாலை அதிபர் ஏ.சீ.நியாஸ் தலைமையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வுகளுக்கு கல்விப் பணிமனையின் உதவி கல்விப் பணிப்பாளர் எம். சித்தி பாத்திமா பிரதம அதிதியாக கலந்து கொண்டு, மாணவர்களுக்கு சின்னம் சூட்டியதுடன், சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார். இந்நிகழ்வுகளில் பாடசாலையின் பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# நகர்வலம்



# GMOA முன்மொழிவுகளை சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பிக்க இணக்கம்

## மருத்துவ MP க்களின் ஒன்றியம் தெரிவிப்பு



இலங்கை மருத்துவ பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தில், அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட முக்கியமான முன்மொழிவுகள் குறித்து பாராளுமன்றத்தில் அண்மையில் கூடிய (06)போது கலந்துரையாடப்பட்டுள்ளது. ஒன்றியம் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தலைமையில் கூடியபோதே இவ்விடயம் பற்றி ஆராயப்பட்டது.

வைத்திய அதிகாரிகளின் பணிச்சூழல் மற்றும் அவர்களுக்கான அங்கீகாரத்தை மேம்படுத்துவது தொடர்பான முன்மொழிவுகள் சிலவற்றை அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்வைத்திருந்தது. தமக்கு வழங்கப்பட்ட பணிக்கு மேலதிகமாகப் பணியாற்றும் விசேட தர மருத்துவ அதிகாரிகள் மற்றும் ஏனைய தரத்திலான மருத்துவ அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகளை வழங்குவது, 'இலங்கை மருத்துவ சேவை' என்ற தனியான பிரிவொன்றை உருவாக்குதல் மற்றும் அதற்குத் தனியான சம்பளக் குறியீட்டை உருவாக்குதல் உள்ளிட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

இந்த முன்மொழிவுகளுக்குத் தனது ஆதரவைத் தெரிவித்த ஒன்றியம் இவற்றுக்கு கொள்கை ரீதியில் இணக்கம் தெரிவித்தது. இம் முன்மொழிவுகள் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கும், அவற்றைக் கவனத்தில் கொள்வதற்குமாக சுகாதார அமைச்சுக்கு ஆற்றுப்படுத்துவதாகவும் இலங்கை மருத்துவ பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் தெரிவித்தது.

இவ்வாறு முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளுக்கு சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ரமேஷ் பத்திரன மற்றும் இராஜாங்க அமைச்சர் வைத்திய கலாநிதி சீதா அரம்பேபொல ஆகியோர் கொள்கை ரீதியில் இணக்கம் தெரிவித்ததுடன், மருத்துவ நிபுணர்களின் நலன்களை முன்னேற்றுவதற்கான கூட்டு முயற்சிக்கான நல்லெண்ண சமிக்ஞையை வெளிப்படுத்தினர்.

இலங்கையில் சுகாதாரத் துறையின் வளர்ச்சிக்கும் மருத்துவ அதிகாரிகளின் மேம்பாட்டிற்கும் உறுதுணையாக இருக்கும் ஒன்றியத்தின் செயற்பாடுகளுக்கு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தனது பாராட்டுகளைத் தெரிவித்தது.

இந்த கூட்டத்தில் ஒன்றியத்தின் உறுப்பினர்களான சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ரமேஷ் பத்திரன, இராஜாங்க அமைச்சர் வைத்திய கலாநிதி சீதா ஆரம்பேபொல, வைத்திய கலாநிதி ராஜித சேனாரத்ன, வைத்திய கலாநிதி சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, வைத்திய கலாநிதி திலக் ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொண்டனர்.

# விஜேயதாச ராஜபக்ஷ, திலித் ஜயவீர வேட்புமனுவில் கையெழுத்திட்டனர்





ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக சர்வஜன சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர வேட்புமனு பத்திரத்தில் நேற்று கைச்சாத்திட்டார்.

அத்துடன் முன்னாள் அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவும் நேற்று புதன்கிழமை (14) வேட்புமனுவில் கையெழுத்திட்டார்.

விஜேயதாச ராஜபக்ஷ தேசிய ஜனநாயக முன்னணி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுகிறார்.

இதேவேளை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவும் வேட்புமனு பத்திரத்தில் கைச்சாத்திட்டார்.

# ஐ.ம.சவின் ஹம்பாந்தோட்டை இணைப்பாளராக ஐயூப் கான்

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**



ஐக்கிய மக்கள் சக்தியின் ஹம்பாந்தோட்டை மாவட்ட இணைப்பாளராக ஐயூப் கான் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஹம்பாந்தோட்டை புனிதமேரி வித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர், ஹம்பாந்தோட்டை மாநகர சபையின் பிரதி மேயராகவும் இருந்துள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியாக நாட்டின் பல பாகங்களிலும் சேவையாற்றியுள்ள இவர், இக்காலப் பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் சமாதான படையணியில் சேவையாற்றி பதக்கங்களையும் பெற்றுள்ளதோடு நல்லாட்சி அரசாங்கத்தில் ஹம்பாந்தோட்டை உப்பளத்தின் தலைவராக இவர் நியமிக்கப்பட்டு அக்காலப் பகுதியில் உப்பளத்தில் பாரிய அபிவிருத்தி திட்டங்களையும் முன்னெடுத்து பல்வேறு சேவைகளையும் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புத்தளம் கிராமிய அபிவிருத்தி நிறுவன ஏற்பாட்டில் இருநாள் செயலமர்வு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளம், கிராமிய அபிவிருத்தி நிறுவனம் ஏற்பாடு செய்த மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் எனும் தலைப்பிலான இருநாள் செயலமர்வொன்று கடந்த சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களில் இடம்பெற்றது.

கிராமிய அபிவிருத்தி நிறுவனத்தின் செயலாளர் ஏ.ஆர்.ஏ. ரமீஸின் தலைமையில் இடம்பெற்ற இந்த செயலமர்வில் முகாமையாளர் ஏ.டி.ஜே. ரஜனி, கணக்காளர் ஆர். ரன்ஜன் , திட்ட இணைப்பாளர் எம்.பி.எம்.சப்றாஸ் ஆகியோருடன் வளவாளர்களாக ஆயிஷா பானு, ஈ.ஜே.ஜே. பவித்ரன், லக்மால் பெர்னாண்டோ, ஹிருனி கௌசல்யா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த செயலமர்வில் புத்தளம் தெற்கு, தில்லையடி, ரத்மல்யாய, பாலாவி, கரம்பை, வீரபுர ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த வயது, சமயம் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டனர். இதன்போது, எமது அடையாளங்களையும், நம்பிக்கைகளையும், உரிமைகளையும் பின்பற்றும் போது அது மற்றவர்களை எவ்வாறு பாதிக்கின்றது என்பது பற்றி இந்த செயலமர்வில் எடுத்துரைக்கப்பட்டது.

# வலம்புரி கவிதா வட்டத்தின் 103 ஆவது கவியரங்கு



வலம்புரி கவிதா வட்டத்தின் 103 ஆவது கவியரங்கம் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெறும். கலைஞானச் சுடர் சுபாஷினி பிரணவன் கவியரங்கிற்கு தலைமை தாங்குவார்.

நான்கு நிமிடங்களுக்கு உட்பட்ட கவிதை பாட விரும்புவோர் நஜ்முல் ஹுசைன் (தலைவர்) 074 143 8447 அல்லது இளநெஞ்சன் முர்ஷிதீன் (செயலாளர்) 077 738 8149 அல்லது ஈழகணேஷ் (பொருளாளர்) 071 756 3646 உடன் தொடர்பு கொள்ளவும்.

# இந்தோனேசிய தூதரக ஏற்பாட்டில் கொழும்பில் 'கலாசார நிகழ்வு'

**ருஸைக் பாரூக்**





இந்தோனேசிய தூதரகம் மற்றும் இலங்கை இந்தோனேசிய நட்புறவு சங்கம் இணைந்து ஒழுங்கு செய்த "இந்தோனேசிய விழா" தூதரக வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

"இந்தோனேசிய விழா" மூன்றாவது ஆண்டாக ஒரு கலாசார நிகழ்வாக ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்வின் மூலம் கிடைக்கும் வருமானம் அனைத்தும் தொண்டு நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான இந்தோனேசியாவின் தூதுவர் Dewi Gustina Tobing அவர்களால் மேற்படி விற்பனை பஸார் திறந்து வைக்கப்பட்டது. அவரை சங்கத்தின் தலைவர் நிஹால் ஜயசூரிய மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் வரவேற்றனர்.

இந்த விழாவில் ஈரான், நேபாளம், மாலைதீவு, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளின் வெளிநாட்டு தூதுவர்கள் கலந்து கொண்டனர். இந்தோனேசிய விழாவின் கலாசார நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை பாராளுமன்ற செயலாளர் திருமதி குஷானி அனுஷா ரோஹணதீர கலந்து கொண்டார்.

மேற்படி விற்பனை பஸார் உணவுப் பொருட்கள், ஆடைகள், வீட்டுப் பொருட்கள், கைவினைப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள், ஆடம்பரப் பொருட்கள் மற்றும் உணவு உள்ளிட்ட பல்வேறு வகையான பொருட்களை காட்சிப்படுத்தும் மற்றும் விற்பனை செய்யும் 40 வர்த்தக கடைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.




தமிழ்நாடு, இராமேஸ்வரம் கம்பன் கழகத்தின் கம்பன் விழா நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி விழாவை தொடக்கி வைத்தார். விழாவில் ஆளுநர் கம்பவாரிதி ஐயாவிற்கு விருது வழங்கி கௌரவிக்கப்படுவதை படங்களில் காணலாம்.

# உடப்பூர் இந்து நெறிக்கழக ஏற்பாட்டில் பாதயாத்திரை



**உடப்பு குறூப் நிருபர்**

உடப்பூர் இந்து நெறிக்கழகத்தின் ஏற்பாட்டில் உடப்பிலிருந்து (14) ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு ஆரம்பமான பாதயாத்திரை முன்னேஸ்வரத்தை நோக்கி ஆரம்பமானது.

இதில் சுமார் ஆயிரம் பக்த அடியார்கள் கலந்து கொண்டதோடு, ஆராச்சிக்கட்டு மானாவரி இராஜ இராஜேஸ்வரி ஆலயம் மற்றும் சிலாபம் தெதுருஓயா சித்தமடம் ஐயனார் ஆலயம் போன்றவற்றில் தரித்து நின்று சென்றமை குறிப்பிடத்தக்கது.

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

**திறப்பனை தினகரன் நிருபர்**



அநுராதபுரம் புதிய நகரை பிறப்பிடமாகக் கொண்ட ஜனுல் ஹக் அமீருள் ஹக் அண்மையில் அநுராதபுரம் மாவட்ட சமாதான நீதவானாக அநுராதபுரம் நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான கே.எம்.ஆர்.டி.எஸ். ஹேவாவசம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர், அநுராதபுரம் ஸாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்க முன்னாள் செயலாளரும் சமூக சேவையாளருமான இவர், அநுராதபுரம் நகரை சேர்ந்த ஓய்வு பெற்ற அதிபர் ஜனுல் ஹக் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வருமாவார்.

# தனாகம பாடசாலையில் சின்னம் சூட்டும் நிகழ்வு







கே/மாவ/தனாகம முஸ்லிம் வித்தியாலயத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கல்லூரி அதிபர் திருமதி டி.எல். நிஷா தலைமையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விசேட அதிதியாக மாவனல்லை கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி நிரோஷா பெர்னாண்டோவும், சிறப்பு அதிதியாக மாவனல்லை பிரதான பொலிஸ் பரிசோதகர் திரு. லசந்த கலு ஆராச்சி. வலய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர், மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

CargillsBank
வாழ்க்கைக்கு உயிரூட்டும் வங்கி

# கார்கில்ஸ் வங்கி பிஎல்சி
# 30 ஜூன் 2024 இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கான நிதிநிலைகள் அறிக்கைகள்

## வருமானக் கூற்று

| | ஆறு மாதங்கள் முடிந்தது | | | காலாண்டு முடிந்தது | | |
|---|---|---|---|---|---|---|
| | 30-06-2024 ரூ. '000 | 30-06-2023 ரூ. '000 | மாற்றம் % | 30-06-2024 ரூ. '000 | 30-06-2023 ரூ. '000 | மாற்றம் % |
| வட்டி வருமானம் | 4,496,186 | 5,702,855 | (21) | 2,150,306 | 3,027,980 | (29) |
| கழி: வட்டிச் செலவினங்கள் | (2,838,430) | (3,995,961) | 29 | (1,306,792) | (2,153,658) | 39 |
| **தேறிய வட்டி வருமானம்** | 1,657,756 | 1,706,894 | (3) | 843,514 | 874,322 | (4) |
- உல்லாசப் பயணிகளுக்கான மிகப் பெரிய மூலம்

Source: CBSL report 2023

**2022** ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயல்பட முடிவெடுத்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறிய 20 பாராளுமன்ற உறுப்பினரைக் கொண்ட குழுவினால் உருவான புதிய கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, சில முற்போக்கு கட்சிகளின் ஆதரவுடன் இந்நாட்டின் இடதுசாரி முன்னணி பொதுஜன ஐக்கிய முன்னணி என்ற பெயரில் அரசுடன் இணைந்துள்ளது. அதன் தேர்தல் சின்னம் 1994 ஆம் ஆண்டு வெற்றி பெற்ற நாற்காலி சின்னமாகும். அது தொடர்பாக அந்த புதிய கூட்டணியின் சிரேஷ்ட தலைவரான குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பாவுடனான கலந்துரையாடல்.



# அரசு கொள்கையில் மாற்றம் ஏற்படுமானால் அடுத்த கடன் தவணைக்கு மோசமான பாதிப்பு!

## குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா

**கே: புதிய கூட்டணியாக அரசியலில் ஈடுபட்ட 2022 ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கத்திலிருந்து வேறாகி சுயாதீனமான நடவடிக்கையில் ஈடுபடும் இருபத்தைந்து எம்.பிக்கள் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் எவ்வாறான முடிவை எடுப்பார்கள்?**

பதில்: புதிய கூட்டணியாக செயற்பட்ட எமது இருபத்தைந்து எம்.பிக்கள் சுயேச்சையாக போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளனர். இன்று நாட்டில் நிலவும் பிரச்சினைக்கு யார் சிறந்த தீர்வை வழங்க முடியும் என்பதன் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. அப்படியில்லாமல் எந்தக் கட்சியுடனும் எங்களுக்கு தனிப்பட்ட நேயமோ, தனிப்பட்ட பகையோ கிடையாது. அனைவரும் எங்கள் நண்பர்கள். நாங்கள் இங்கே ஒரு அரசியல் முடிவை மட்டுமே எடுத்தோம்.

தற்போதைய ஜனாதிபதியின் இரண்டு வருட பதவிக் காலத்தை நாம் மிகவும் ஆழமாக அவதானித்தோம். நான் பார்த்தது என்னவென்றால், இந்த நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிக்கு யதார்த்தமான தீர்வுகளை வழங்கும் திறன் ஜனாதிபதிக்கு மட்டுமே உள்ளது. சகோதரர் அனுரகுமார திசாநாயக்கா அல்லது சஜித் பிரேமதாச வெளிப்படுத்தும் கருத்துக்கள் மற்றும் கொள்கைகள் முற்றிலும் தவறானவை என்ற வெறுப்புடன் நாங்கள் அரசியல் செய்யவில்லை.

ஆனால் எமக்குள்ள அரசியல் பார்வையின் அனுபவத்தின்படி இரண்டு வருடங்களில் இந்த நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்த்து ஓரளவு நாட்டை மீட்டெடுக்க ஜனாதிபதியால் முடிந்துள்ளது. அதனால், இந்நிலைமையை முழுமையாக மீட்டெடுக்கும் திறனும் கொள்கைப் பார்வையும் கொண்டவர் ரணில் விக்கிரமசிங்க ஆவார். அவர் தற்போது சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து நடவடிக்கையில் ஈடுபடுகின்றார் . சில கொள்கைகளில் மட்டுமே நாங்கள் ஒன்றாக வேலை செய்கிறோம், எனவே இந்தக் கொள்கைகளை மாற்றிக்கொண்டு புதிய பயணத்தில் ஈடுபடவோ அல்லது எதிர்வினையாற்றுவதற்கோ இது நேரம் அல்ல. செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் திருத்தப்பட்டு மறுபரிசீலனை செய்யப்படும் என தேர்தலில் போட்டியிடும் மூன்று முக்கிய வேட்பாளர்களில் ஒருவரான அனுரகுமார திசாநாயக்க கூறுகிறார். ஆனால் இப்போது ஒப்பந்தங்களைப் பார்க்கவோ அல்லது மாற்றவோ கூடிய கட்டத்தில் நாங்கள் இல்லை. எமது நாட்டைச் சீர்குலைக்காமல் சரியான பாதையை உறுதியாக எடுத்துச் செல்லக்கூடிய ஜனாதிபதியின் கொள்கை சரியானது என நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். அடுத்த விடயம் என்னவென்றால் சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த கடன் தவணை ஒக்டோபர் மாதமளவில் கிடைக்கவுள்ளது. அரசின் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டாலும், அதைப் பெறுவது சிரமமாக இருக்கும்.

**கே: இந்த உண்மைகளைத் தவிர, உங்கள் அரசியல் குழு ஜனாதிபதியை ஆதரிப்பதில் வேறு எந்த நோக்கமும் இல்லையா? அரசியல் ரீதியாக நீங்கள் தனித்துள்ளதால் வெவ்வேறு முடிவுகளை எடுப்பதாக சிலர் கூறுகின்றார்களே?**

பதில்: இல்லை, இந்த நேரத்தில் நாட்டைப் பற்றி மட்டுமே சிந்திக்கிறோம். இந்த நேரத்தில், நாட்டின் முக்கிய பிரச்சினை பொருளாதாரமாகும். 2022 இல் ஏற்பட்ட இளைஞர் போராட்டத்திற்கு காரணம் அரசியல் என்பதை விட பொருளாதாரமே. எண்ணெய், எரிவாயு மற்றும் உணவு இருந்திருந்தால் இவ்வளவு வலுவான அரசியல் போராட்ட அலை எழுந்திருக்காது. பொருளாதாரப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு அல்ல, பொருளாதாரத் தீர்வு அவசியம். ரணில் விக்கிரமசிங்க அரசியல் தீர்வுகளை வழங்குவதை விட பொருளாதார பிரச்சினை, பொருளாதார நெருக்கடி மற்றும் கொள்கைகளை சரியாக கையாளும் திறன் கொண்டவர். அதனால்தான் இந்த இக்கட்டான நேரத்தில் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கிறோம்.

**கே: தனிப்பட்ட நபரை அடிப்படையாகக் கொண்டு அரசியல் செய்யும் ஒரு காலம் இருந்தது. அவ்வேளையில் நீங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சி முகாம் தனிப்பட்ட நபரை முதன்மையாகக் கொண்டு செயல்பட்டது என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது அல்லவா?**

பதில்: அந்தக் குற்றச்சாட்டு இன்று செல்லுபடியாகாது. நாம் எந்த ஒரு நபர் தொடர்பாகவும் தனிப்பட்ட நம்பிக்கையில் வேலை செய்வதில்லை. நாம் நடவடிக்கையில் ஈடுபடுவது கொள்கை மற்றும் வேலைத் திட்டங்களுக்கு அமையவே. இச்சந்தர்ப்பத்தில் எமது கொள்கைக்கு அமைய நாட்டின் நலனுக்காக மிகவும் சிறந்த குழு மற்றும் நபருக்கு ஆதரவளிப்பதையே நாம் மேற்கொள்கின்றோம். அவ்வாறில்லாமல் காலாவதியான தனிப்பட்ட செல்வாக்கு முறையை நம் நாடு ஏற்காது.

**கே: உங்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் புதிய கூட்டணி அரசியல் குழுக்கள் நீண்ட காலம் அரசியல் செய்ய வேண்டும். அதற்காக உங்கள் அணி எடுக்கும் நடவடிக்கைகள் எவை?**

பதில்: எங்கள் குழுவில் சுமார் இருபத்தைந்து பேர் உள்ளனர். அத்துடன் நிமல் சிறிபால டி சில்வா தலைவர் பதவியை வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஏனைய முற்போக்கு அரசியல் குழுக்களுடன் இணைந்து பொதுஜன எக்ஸத் பெரமுனவை கதிரை சின்னத்தில் மீண்டும் மீள் உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**கே: ஐக்கிய மக்கள் கூட்டணி தற்போது செயலாளர் பதவி தொடர்பான பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளது. அந்நிலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொதுஜன ஐக்கிய பெரமுனவும் அவ்வாறான பிரச்சினைக்கு முகம் கொடுத்ததில்லையா?**

பதில்: இல்லை, பொதுஜன ஐக்கிய முன்னணியின் தற்போதைய செயலாளர் லசந்த அழகியவன்ன. அவருக்கோ பொதுஜன ஐக்கிய மக்கள் முன்னணிக்கோ எந்தவித சட்டத் தடையும் இல்லை.

எனவே எமது புதிய கூட்டணியின் அரசியல் கட்சியாக பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் கதிரை சின்னம் தெரிவு செய்யப்பட்டது.

**கே: கட்சியின் அதிகாரபூர்வ குழு மற்றும் தலைமை மாற்றங்களைக் குறிப்பிட முடியுமா?**

பதில்: பொதுஜன ஐக்கிய முன்னணியில் ஒரு தலைவருக்குப் பதிலாக, தலைமைத்துவ சபையொன்று நியமிக்கப்படுகிறது, அங்கு சுமார் 25% பங்குகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் எஞ்சியவை ஏனைய கட்சிகளுக்கும் செல்கின்றன. இதுவரை, துணைக் கட்சிகள் ஒரு பிரதான கட்சியான ஒரு தலைவரைச் சுற்றி பெயரளவு கூட்டணியை உருவாக்குவதுதான் நடந்துள்ளது. ஆனால் பொது ஐக்கிய முன்னணி என்பது மிகவும் மாறுபட்ட அரசியல் குழு.

**கே: அரசியல் குறித்த நடவடிக்கைகளில் ஈடுபடும் போது வாக்குறுதி அரசியல் அதிகமாக பேசப்பட்டது. வாக்குறுதி அரசியல் நம் நாட்டை எவ்வாறு பாதித்தது?**

பதில்: எமது பொருளாதாரத்துக்கு இவ்வாறான நிலைமை ஏற்பட்டது மதிப்பீடு செய்யாமல் பொருளாதாரத்தை புறக்கணித்துவிட்டு, நடவடிக்கையில் ஈடுபட்டதனாலாகும். ஒரு சந்தர்ப்பத்தில் அரச தலைவர் பொது மேடையில் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக சீருடை வழங்குவதாக வாக்குறுதி அளித்தார். அந்த வாக்குறுதியை பொருளாதாரம் குறித்து ஆராய்ந்து அல்லது திறைசேரியில் அனுமதிக்க கேட்டோ அல்ல. தன்னுடைய இஷ்டத்திற்கு தெரிவித்தார். இவ்வாறான விடயங்களால்தான் நமது நாட்டின் பொருளாதாரம் இப்படிச் சரிந்து போனது. எவ்வித திட்டமும் இன்றி ஒவ்வொருவரும் எடுத்த முடிவுகளின் விளைவுதான் நாம் இன்று இவ்வாறு துன்பப்படுகின்றோம்.

தற்போது மீண்டும் ஜனாதிபதி வேட்பாளர்கள் பல விதங்களில் வாக்குறுதிகளை பெற்றுக் கொடுத்து வருகின்றார்கள். ஆனால் இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற பணம் எங்குள்ளது? மீண்டும் பணத்தை அச்சடித்து நமது பொருளாதாரத்தை மீண்டும் நெருக்கடிக்கு அனுப்ப வேண்டுமா என்பதை ஜனாதிபதி வேட்பாளர்கள் கூற வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேவையான அளவு நிவாரணங்களையும் உதவிகளையும் வழங்கியுள்ளார். இதற்கு அப்பால் ஏதேனும் உதவித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், ஜனாதிபதி வேட்பாளர்கள் அதற்கு பணம் எங்கே கிடைக்கும் என்பதை பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

**கே: 2022 இல் அரசாங்கத்தில் இருந்து ஆரம்பத்தில் விலகி சுயாதீனமான உங்கள் குழு ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு பெற்றுக் கொடுப்பதோடு, அதன் பின்னர் அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமான டலஸ் அழகபெரும உள்ளிட்டோருடன் ஐக்கிய மக்கள் கூட்டமைப்புடன் இணைந்தீர்கள். அன்று நீங்கள் இருதரப்பாரும் ஒரே கொள்கையில் இருந்தீர்கள். தற்போது வெவ்வேறு கொள்கையை பின்பற்றுகிறீர்களா?**

பதில்: நாம் யாருடனும் இணைய மாட்டோம், தனியான அரசியல் கூட்டணியாக இருப்போம். ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைய மாட்டோம். காலத்தின் தேவைக்கு ஏற்ப செயற்படுவோம். ஆனால் டலஸ் அழகப்பெரும உட்பட குழுவில் உள்ள பலர் ஏற்கனவே கூட்டணியில் ஆசனங்களைக் கைப்பற்றி அரசியல் செய்து வருகின்றனர். ஆனால் நாட்டிற்கான பணி ஒழுங்குக்கு மட்டுமே நாங்கள் ஆதரவை வழங்குகிறோம். நாங்கள் எதிர்வரும் தேர்தல்களில் பொதுஜன ஐக்கிய முன்னணியாக போட்டியிட தயாராக உள்ள நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து அண்மையில் விலகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவினரும் பொதுஜன ஐக்கிய பெரமுனவில் இணைவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்து வருகின்றனர்.

**கே: ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறார். அது இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தீர்மானம் மிக்க பாதிப்பை ஏற்படுத்துமா?**

பதில்: ஒரு போதுமில்லை. தோல்வியை ஏற்றுக்கொண்டுள்ள நாமல் ராஜபக்ஷவிடமிருந்து தீர்க்கமான செல்வாக்கு இருக்கும் என்று நினைக்க முடியாது. தங்களால் வெற்றி பெற முடியாது என எண்ணியவுடனேயே பெருமளவிலான வாக்காளர்கள் வெளியேறி விடுவார்கள். இன்றைய நிலையில் நாமல் ராஜபக்ஷவுக்கு எவ்வளவு வாக்குகள் கிடைக்கும் என்பது எனக்குத் தெரியும், ஆனால் நெறிமுறை காரணங்களுக்காக நான் வாக்குகளின் எண்ணிக்கையைக் கூறமாட்டேன். ஆனால் அவர் தோல்வியுற்றவர், வெற்றி பெற அவருக்கு தசமளவாவது வாய்ப்பு கூட இல்லை.

உண்மையில், அவர் ஏன் இந்த முடிவை எடுத்தார் என்பதும் ஒரு பிரச்சினை.

**கே: ஆனால் மகிந்த ராஜபக்ஷவுக்கு இன்னும் நாடு முழுவதும் கணிசமான மக்கள் ஆதரவு உள்ளது, அது நாமல் ராஜபக்ஷவுக்கு சாதகமான நிலைமை அல்லவா?**

பதில்: ஒரு கருத்துக் கணிப்பாளர் என்று நான் கூறவில்லை, அவர் சில வாக்குகளைப் பெறலாம். ஆனால் அது ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு போதுமானதாக இல்லை.

**உதித்த குணவர்தன...**
தமிழில்: வீ.ஆர்.வயலட்

# பொருளாதார முன்னேற்றப் பாதைக்கு வழிவகுக்கும் சவுதி விஷன்–2030




சவுதி அரேபியா கனிய வளத்தில் தலைநிமிர்ந்து சிறந்து விளங்கி வருகின்ற போதிலும், அவற்றில் இருந்து மற்றுமொரு படி நிலையை அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு ஏனைய துறைகளில் முதலீடு செய்ய 'சவுதி விஷன் 2030' எனும் திட்டத்தை தற்போது செயற்படுத்தி வருகிறது.

இதற்காக பெற்றோலிய உற்பத்தி அல்லாத சுற்றுலா, தொழில்நுட்பம் போன்ற துறைகளில் முதலீடு செய்து நாட்டை மேலும் கட்டி எழுப்புவதே சவுதி விஷன் 2030 இன் பிரதான நோக்கமாகும். துடிப்பானதொரு சமூகம், வளமான பொருளாதாரம் மற்றும் இலட்சியம் வாய்ந்த ஒரு நாடு எனும் மூன்று முதன்மை கருப்பொருட்களை கொண்டு சவுதி விஷன் 2030 திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் திட்டம் நீண்ட கால பொருளாதார வெற்றிக்கான இலக்குகள் சீர்திருத்தங்களை உள்ளடக்கியுள்ளது.



சவுதி அரம்கோவுக்கான தனியார் முதலீட்டை ஊக்குவிப்பதோடு, மானியத்தை குறைத்தல், சுற்றுலா மற்றும் பாதுகாப்பு போன்ற துறைகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் இவற்றில் அடங்குகின்றன. பெண்களுக்கான தொழில், கல்வி வாய்ப்புகளை அதிகரித்தல், விளையாட்டு, கலை போன்ற துறைகளில் ஈடுபடுத்துதல், சமஉரிமை வழங்கல் போன்ற பெண்களுக்கான திட்டங்களும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

உம்ரா யாத்திரைக்காக வரும் யாத்திரிகர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், உலகின் மிகப்பெரிய இஸ்லாமிய அருங்காட்சியத்தை அமைத்தல், யுனெஸ்கோவில் பதிவு செய்யப்பட்ட சவுதியின் பாரம்பரிய தளங்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குதல், ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவித்தல், உலகின் 100 முதல் தரவரிசை நகரங்களில் சவுதியின் பிரதானமான 03 நகரங்களும் உள்ளடங்கும் வகையில் அபிவிருத்தி செய்தல், கலாசாரம், பொழுதுபோக்குக்கான வளர்ச்சியை ஊக்குவித்தல் என்பன சவுதி விஷன் 2030 இல் உள்ளடங்குகின்றன.

மேலும் சவுதி மக்களுக்காக கணிசமான அளவு வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், கல்வி தொழில்நுட்பம் பாடத்திட்டத்தின் தரத்தை நவீனப்படுத்துதல், பல்கலைக்கழகங்களை உலகின் முதல்தர பல்கலைக்கழகமாக கொண்டு வருதல், சிறிய நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்துதல், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பங்களிப்பை உயர்த்துதல் போன்ற பல்வேறு நோக்கங்கள் சவுதி அரேபியா 2030 திட்டத்திற்குள் அடங்குகின்றன. இளவரசர் முஹம்மத் பின் சல்மான் தலைமையிலான பொருளாதார மற்றும் மேம்பாட்டு விவகார கவுன்சிலால் சவுதி விஷன் 2030 திட்டம் முன் கொண்டு செல்லப்படுகிறது.



**எம்.எல்.சரிப்டீன்...**
(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

## ஸ்ரீநாக முத்துமாரியம்மன் ஆலய பால் குடபவனி



கொழும்பு கிருலப்பனை கற்குழி வீதி ஸ்ரீநாக முத்துமாரியம்மன் ஆலய இரண்டாம் ஆண்டு பால் குடபவனி அண்மையில் இடம்பெற்றபோது...

சவூதி அரேபியாவில் வாழுகின்ற இலங்கை பிரஜைகளுக்காக...

# "உங்கள் தூதுவருடன் நீங்களும் உரையாடலாம்" என்ற நேரடி நிகழ்ச்சி இன்று ஆரம்பம்

இலங்கையில் இருந்து குடிபெயர்ந்து சவூதி அரேபியாவில் வாழ்கின்ற சகல பிரஜைகளும் சவூதி அரேபியாவுக்கான தமது நாட்டுத் தூதுவருடன் நேரடியாகப் பேசுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்ற நோக்கில் ரியாதில் உள்ள இலங்கை தூதரகம் "உங்கள் தூதுவருடன் நீங்களும் உரையாடலாம்" என்ற பெயரில் சமூகத்தை நோக்கிய ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகம் செய்கின்றது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்கான சம்பிரதாயபூர்வமான ஆரம்ப நிகழ்வு இன்று 15 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.30 பி.ப. 1.30 வரை இடம்பெறவுள்ளது.



இது இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து சவூதி அரேபியாவில் வாழ்கின்ற சகல பிரஜைகளும் தமது பிரச்சினைகளை முன்வைத்து தூதுவருடன் கலந்துரையாடுவதற்கும், சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவரை நேரடியாகத் தொடர்பு கொண்டு தமது ஆலோசனைகளை முன்வைப்பதற்குமான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.

இந்த சந்திப்பு இரு வாரங்களுக்கு ஒரு முறை வியாழக்கிழமை தினங்களில் மு.ப. 9.30 பி.ப. 1.30 வரை இடம்பெறும். ரியாதில் உள்ள இலங்கைத் தூதரகம் இந்தப் புதிய முன்னெடுப்பினை இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் கட்டியெழுப்பப்பட்டு 50 ஆண்டு பூர்த்தியாவதைக் கொண்டாடுவதுடன் இணைந்ததாக அறிமுகப்படுத்துகிறது.

இந்த சந்திப்பில் பின்வரும் தொலைபேசி/ வாட்ஸ்அப் (WhatsApp)/ ஐ.எம்.ஓ. (IMO) ஆகிய இலக்கங்களின் ஊடாக கலந்து கொள்ள முடியும் +966 56 1744748

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

## மூன்றாவது சர்வதேச சிலப்பதிகார மாநாடு–2024

ஆஸ்திரேலியா தலைநகரான சிட்னியில் 2024 நவம்பர் 30, டிசம்பர் 1 ஆகிய இரு நாட்கள் மூன்றாவது சர்வதேச சிலப்பதிகார மாநாடு நடைபெறுகிறது. இம்மாநாட்டை சிட்னி கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் டாக்டர் இரத்தின மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

உலகளாவிய தமிழறிஞர்களும் பேராசிரியர்களும் ஆய்வாளர்களும் இம்மாநாட்டில் பங்கேற்கின்றனர். மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர்களான முனைவர் மோ. பாட்டழகன், முனைவர் மா. பத்மபிரியா மாநாட்டுக்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

மாநாட்டில் பங்கேற்க விரும்புகிறவர்கள் +91 9380417307., +91 9486862263 என்ற எண்ணில் தொடர்பு கொள்ள லாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## கற்பிட்டி அல் அக்ஸாவின் புதிய அதிபராக அமீர்

**புத்தளம் தினகரன் நிருபர்**

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் புதிய அதிபராக இலங்கை அதிபர் சேவை தரம் 01 ஐ சேர்ந்த கெக்குனுகொல்ல யூ.எம்.எம் அமீர், திங்கட்கிழமை (12) தமது கடமையை கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

மேற்படி நிகழ்வு கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் அதிபராக கடமையாற்றிய எம்.என்.எம். நஸ்றீன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கற்பிட்டி கோட்டக் கல்வி பணிப்பாளர் ஏ.எம். ஜவாத், அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் நலன் விரும்பிகள், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர், பழைய மாணவர் சங்கத்தினர் உள்ளிட்ட பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# அக்கரைப்பற்று முனவ்வறாவில் மாணவர் மாதிரி சந்தை

**அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று முனவ்வறா கனிஷ்ட கல்லூரியின் ஆரம்பப் பிரிவு தரம்03 மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட மாதிரி சந்தை நிகழ்வு பாடசாலை வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

அதிபர் எம்.ஐ.எம்.உவைஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது ஆரம்பப் பிரிவு மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். ஆசிரியர்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் இம்மாணவர் சந்தை வெகு விமர்சையாக இடம்பெற்றது.

மாணவர்களின் கணித மற்றும் தமிழ் அறிவை மேம்படுத்துவதுடன், சமூக தொடர்பாடல் விருத்தி, வியாபார நடைமுறைகள், சுகாதார பழக்க வழக்கங்கள், நட்புறவுச் செயற்பாடுகள், அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான விடயங்களை முன்னுரிமை அடிப்படையில் அணுகுதல் போன்ற பல்வேறு விடயங்கள் இதன்மூலம் மாணவர்களுக்கு தெளிவு படுத்தப்பட்டன.

இதன்போது மாணவச்சிறுவர்கள் மகிழ்வுடன் தமது விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன், பாடசாலையின் ஏனைய மாணவர்களும் பெற்றோர்களும் இணைந்து கொண்டனர்.

## பேருவளையில் இலவச மருத்துவ முகாம்

**பேருவளை விசேட நிருபர்**

பேருவளை சீனன் கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையில் எதிர் வரும் 17ஆம் திகதி சனிக்கிழமையும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் குழந்தையின்மைக்கான இலவச மருத்துவ முகாமொன்று இடம்பெறவுள்ளது. சீனன் கோட்டை முத்துக்கள் வட்சப் குழுமம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. இந்தியாவைச் சேர்ந்த தலைசிறந்த வைத்தியர்களான டாக்டர் ஜே.கவ்யா (Dr.j.kavya) மற்றும் டாக்டர் ஓ.எம்.பிரகாஷ் (Dr.o.m.prakash) ஆகியோர் இந்த இலவச வைத்திய முகாமில் பங்குபற்றி வைத்திய ஆலோசனை வழங்கவுள்ளதாக குழுமத்தின் தலைவர் ராமிஸ் நாஸிம் தெரிவித்தார். மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.30 வரை இந்த இலவச மருத்துவ முகாம் இடம்பெறும். இந்த அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாது ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

## கிணற்றிலிருந்து காட்டு யானை மீட்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கெக்கிராவ பலாகல பகுதியில் வயலில் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் கிணற்றில் காட்டு யானையொன்று வீழ்ந்து தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில் வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களால் மீட்கப்பட்டு காட்டுக்குள் விடப்பட்டுள்ளது.

பெகோ இயந்திரம் கொண்டு கிணற்றை அகலப்படுத்தி காட்டு யானை வெளியேறுவதற்கு வழியேற்படுத்தப்பட்டதுடன் இதற்காக பல மணித்தியாலம் சென்றதாகவும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.


## வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| 301 -0XXX | HONDA | CITY.99 | 1999 |
| CAG -7XXX | SUZUKI | ALTO 800 | 2015 |
| CAL -2XXX | MICRO | PANDA LC 1.0 | 2015 |
| **கெப்** | | | |
| DAF -7XXX | TATA | 207 RX PICK UP | 2017 |
| **வேன்** | | | |
| 252 -4XXX | NISSAN | SERENA | 1995 |
| **லொறி** | | | |
| PQ -0XXX | TATA | ACE | 2010 |
| PQ -0XXX | TATA | ACE | 2010 |
| PT -3XXX | MAHINDRA | MAXXIMO | 2012 |
| PT -7XXX | MAHINDRA | MAXXIMO | 2012 |
| PV -7XXX | TATA | SUPERACE | 2013 |
| PX -3XXX | MAHINDRA | MAXXIMO PLUS | 2014 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| HA -2XXX | BAJAJ | BAJAJ AUTO | 2002 |
| HN -7XXX | BAJAJ | AUTO RE 2 SRTOKE | 2003 |
| HV -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| JE -6XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| JS -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| JU -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| QD -2XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QG -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QH -2XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QI -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| YF -1XXX | BAJAJ | RE-205 | 2010 |
| YS -7XXX | BAJAJ | RE 205 | 2011 |
| AAB -5XXX | BAJAJ | RE205 | 2012 |
| ABI -5XXX | BAJAJ | RE | 2015 |
| **துவிச்சக்கர வண்டிகள்** | | | |
| BHE -0XXX | HONDA | DIO SCV 110 | 2018 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2024 ஆகஸ்ட் 15ஆம், 16ஆம், 20ஆம் மற்றும் 21ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2024 ஆகஸ்ட் 21ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.

மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி
Mercantile Investments and Finance PLC
தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

www.skillsads.com

தொடர்பு: தினேஷ் - 0718 751 995
திசர - 0711 624 559



## சுகாதார சேவைத் திணைக்களம்

**தென் மாகாணம்**

**தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்திற்கு சொந்தமான வைத்தியசாலைகளுக்கு சமைத்த/ பச்சை உணவுகளை வழங்குதல் மற்றும் அழுக்குத் துணிகளை சலவை செய்தல் - 2025**

**கேள்வி அறிவித்தல்**

2025 ஜனவரி 01 முதல் 2025 டிசம்பர் 31 வரை உள்ள அட்டவணையில் 2ம் நிரலில் குறிப்பிடப்படும் நிறுவனங்களுக்கு சமைத்த/ பச்சை உணவுகளை வழங்குதல் அழுக்குத் துணிகளை கழுவுவதற்காக தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் கேள்விகள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பிப்பதற்கான நிபந்தனைகள்:-**

- சமைத்த/ பச்சையான உணவுகளை வழங்குவதற்காக மீளளிக்கப்படும் வைப்பு ரூ. 50,000.00 மற்றும் மீளளிக்கப்படாத வைப்பு ரூ. 3,000.00 மற்றும்
- அழுக்குத் துணிகள் கழுவுவதற்காக மீளளிக்கப்படும் வைப்பு ரூ. 3,000.00 மற்றும் மீளளிக்கப்படாத வைப்பு ரூ. 1500.00 செலுத்தி அட்டவணையில் 2ம் நிரலில் குறிப்பிடப்படும் நிறுவனங்கள், அவற்றிற்கு வழங்க வேண்டிய உணவு அளவுகள் (சமைத்த உணவு மற்றும் பச்சை உணவு) மற்றும் கழுவ வேண்டிய துணிகளின் எண்ணிக்கை உள்ளடக்கப்பட்ட தகவல்கள் மற்றும் கேள்வி ஆவணங்களை 2024.08.16 முதல் 2024.09.04 வரை மேற்படி அட்டவணையின் 1ம் நிரலில் குறிப்பிடப்படும் அலுவலகங்களில் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பெற்றுக் கொள்ளலாம்.
- சமைத்த/ பச்சை உணவு வழங்குவதற்காக கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளும் போது கீழ்க்காணும் அளவுகளில் மாதிரிப் பத்திர இல DSM/201 மூலம் பிரதேச செயலாளரால் விநியோகிக்கப்படும் வருமானச் சான்றிதழ் அல்லது மாதிரிப்பத்திர இல பொது 170 சொத்து சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

| வைத்தியசாலையின் பெயர் | சமர்ப்பிக்க வேண்டிய வருமானச் சான்றிதழின் பெறுமதி |
|---|---|
| ஆதார வைத்தியசாலை - பலப்பிட்டிய | ரூ. 1,000,000.00 |
| ஆதார வைத்தியசாலை - எல்பிட்டிய | ரூ. 1,000,000.00 |
| ஆதார வைத்தியசாலை - தங்கல்ல | ரூ. 1,000,000.00 |
| ஆதார வைத்தியசாலை - கம்புறுப்பிட்டிய | ரூ. 1,000,000.00 |
| ஆதார வைத்தியசாலை - உடுகம | ரூ. 750,000.00 |
| ஆதார வைத்தியசாலை - தெனியாய | ரூ. 750,000.00 |
| ஆதார வைத்தியசாலை - வலஸ்முல்ல | ரூ. 750,000.00 |
| ஆதார வைத்தியசாலை - திஸ்ஸமஹாராம | ரூ. 750,000.00 |
| பிரதேச வைத்தியசாலைகளுக்கு (பச்சையுணவு) | ரூ. 600,000.00 |
| பிரதேச வைத்தியசாலைகளுக்கு (சமைத்த உணவு) | ரூ. 500,000.00 |

**கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் மற்றும் திறத்தல்:**
கேள்விதாரர்களால் இருபிரதிகளுடன் வேறு வேறாக பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் பொறியிடப்பட்ட உறையொன்றில் இடப்பட்ட குறித்த சேவை மற்றும் கேள்விதாரரின் பெயரைக் குறிப்பிட்டு 2024.09.05 மு.ப. 10.00 இற்கு முன் அட்டவணையின் 01ம் நிரலில் குறிப்பிடப்படும் அதிகாரிகளுக்கு பதிவுத்தபாலில் அல்லது அவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் அல்லது ஒப்படைக்க முடியும். குறித்த நேரம் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படுவதுடன், பின்னர் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படமாட்டாது. அவ்வேளையில் குறித்த கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தென் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்**
**தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்,**
**இல. 15A, கீழ் டிக்சன் வீதி, காலி**
**தொ.பே.இல. 091-2231620**

**அட்டவணை**

| 1ம் நிரல் | 2ம் நிரல் |
|---|---|
| பெறுகை சபையின் தலைவர், பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை, காலி. தொ.பே. 091-2223439 | காலி மாவட்டத்தின் வைத்தியசாலைகள் (பலப்பிட்டிய மற்றும் எல்பிட்டிய ஆதார வைத்தியசாலைகள் தவிர்த்து) |
| பெறுகை சபைத் தலைவர், பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை, மாத்தறை தொ.பே. 041-2222884 | மாத்தறை மாவட்ட வைத்தியசாலைகள் (கம்புறுப்பிட்டிய ஆதார வைத்தியசாலை தவிர்த்து) |
| பெறுகைச் சபைத் தலைவர், பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை, ஹம்பாந்தோட்டை தொ.பே. 047-2220358 | ஹம்பாந்தோட்ட மாவட்டத்தின் வைத்தியசாலைகள் (தங்கல்ல வலஸ்முல்ல ஆதார வைத்தியசாலை தவிர்த்து) |
| பெறுகை சபைத் தலைவர் ஆதார வைத்தியசாலை, தங்கல்ல தொ.பே. 047-2240261 | ஆதார வைத்தியசாலை,தங்கல்ல |
| பெறுகை சபைத் தலைவர் ஆதார வைத்தியாசாலை, பலப்பிட்டிய தொ.பே. 091-2258261 | ஆதார வைத்தியாசாலை, பலப்பிட்டிய |
| பெறுகைச் சபைத் தலைவர் ஆதார வைத்தியாசல, எல்பிட்டிய தொ.பே. 091-2291261 | ஆதார வைத்தியசாலை, எல்பிட்டிய |
| பெறுகைச் சபைத் தலைவர் ஆதார வைத்தியசாலை, கம்புறுப்பிட்டிய தொ.பே. 041-2292261 | ஆதார வைத்தியசாலை, கம்புறுப்பிட்டிய |
| பெறுகை சபைத் தலைவர் ஆதார வைத்தியாசலை, வலஸ்முல்ல தொ.பே. 047-2245861 | ஆதார வைத்தியசாலை, வலஸ்முல்ல |
| பெறுகைச் சபைத் தலைவர், ஆரார வைத்தியசாலை தெனியாய தொ.பே. 041-2273261 | ஆதார வைத்தியசாலை, தெனியாய |



**இலங்கைப் பாராளுமன்றம்**

## விலைமனுக்கோரல்களுக்கான அழைப்பு

**பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் உள்ள கழிவு நீர் பம்பி முறைமைக்காக மின்சாரத்தில் இயங்கும் ட்ரைவல் குழி நீர் பம்பித் தொகுதிகள் மற்றும் துணைக் கருவிகளின் விநியோகம் மற்றும் பொருத்துகை**

1. "பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் உள்ள கழிவு நீர் பம்பிக் முறைமைக்காக மின்சாரத்தில் இயங்கும் ட்ரைவல் கழிவு நீர் பம்பித் தொகுதிகள் மற்றும் துணைக் கருவிகளின் விநியோகம் மற்றும் பொருத்துகைக்காக" தகைமைவாய்ந்த தரப்பினர்களிடமிருந்து விலைமனுக்கோரல்களை பெறுவதற்கு பாராளுமன்ற செயலாளர் நாயகம் 2024 செப்டெம்பர் 05, பி.ப 2.00 மணி வரை அழைப்பு விடுக்கின்றார்.
2. ஆங்கில மொழியில் உள்ள விலைமனுக்கோரல் பற்றிய முழுமையான ஆவணங்களை பெற விரும்புகின்ற விலைமனுக் கோருநர்கள், மீளளிக்கப்படாத கட்டணமான 3500.00 ரூபா தொகையை சிறாப்பர் கருமபீடத்தில் செலுத்தி, அல்லது பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பெயரில் 7040033 எனும் கணக்கு இலக்கத்திற்கு இலங்கை வங்கியின் பாராளுமன்றக் கிளையில் செலுத்தி, 2024 ஆகஸ்ட் 15 தொடக்கம் 2024 செப்டெம்பர் மாதம் 04 வரையான காலப்பகுதியில் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை, உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) வழங்கல் மற்றும் சேவைகள் அலுவலகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, எனும் முகவரிக்கு எழுத்திலான விண்ணப்பமொன்றினை சமர்ப்பிப்பதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம். வங்கி வைப்பு பற்றுச்சீட்டின் மூலப் பிரதி விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
3. விலைமனுக்கோரல் https://www.parliament.lk/en/secretariat/tenders/view/308 எனும் பாராளுமன்ற இணையதளத்திலும் பார்வையிடும் நோக்கங்களுக்காக மாத்திரம் கிடைக்கக்கூடியதாக உள்ளன.
4. மேலதிக விபரங்களைப் பாராளுமன்றத்தின் வழங்கல் மற்றும் சேவைகள் அலுவலகத்தின் 011-2777358 மற்றும் 011-2777561 எனும் தொலைபேசி இலக்கங்களை அழைப்பதன் மூலமும் பெற்றுக்கொள்ள முடியும்.

**பாராளுமன்ற செயலாளர் நாயகம்**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**



## இலங்கை வங்கி

**ஏலவிலை கூறலுக்கான அழைப்பு (IFB)**

**கேள்விப்பத்திர இல: P/PROC/2024/256**

விளம்பர நடவடிக்கைகளுக்கான
பரிசுப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் - 2025

| வகை | பரிசு விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | பொருத்தமான பரிசு/ பரிசுப் பொதி | 80,000 |
| 2 | பொருத்தமான பரிசு/ பரிசுப் பொதி | 35,000 |
| 3 | பொருத்தமான பரிசு/ பரிசுப் பொதி | 25,000 |
| 4 | பொருத்தமான பரிசு | 2,500 |
| 5 | பொருத்தமான பரிசு | 12,000 |

பரிசுப் பொருட்களை வழங்கும் உற்பத்தியாளர்கள் அல்லது விநியோகத்தர்களிடமிருந்து மேலே குறிப்பிடப்பட்ட பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட ஏலவிலை கூறல்கள் கோரப்படுகின்றன.

**முக்கிய திகதிகள்**

| | |
|---|---|
| விலைகூறல் ஆவணங்களை வழங்குவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2024.09.04 அன்று 1500 மணி |
| விலைகூறல் ஆவணங்களை வழங்குவதற்கான காலப்பகுதி | : வேலை நாட்களில் 0900 மணியிலிருந்து 1500 மணி வரை |
| விலைகூறலுக்கான முற்கூட்டிய கூட்டம் | : 2024.08.22 அன்று 1100 மணிக்கு 14ஆம் தளம், இலங்கை வங்கி, தலைமை அலுவலகக் கட்டடம் |
| விலைகூறலை மூடும் திகதியும் நேரமும் | : 2024.09.05 அன்று 1000 மணி |
| விலைகூறலைத் திறத்தல் | : விலைகூறல் முடிவடைந்ததும் |

மேலதிக விபரங்களுக்கு, விலைகூறுவோர் www.boc.lk என்ற இலங்கை வங்கியின் வலைத்தளத்தைப் பார்வையிடலாம்.

ஏதேனும் அல்லது அனைத்து விலைகூறல்களையும் நிராகரிப்பதற்கான உரிமையையும் எவ்வித காரணமும் தெரிவிக்காது விலைகூறலை அல்லது அதன் ஏதேனும் ஒரு பாகத்தினை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையினையும் இலங்கை வங்கி கொண்டுள்ளது.

**பிரதான முகாமையாளர்**
சொத்துகளும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி தலைமை அலுவலகம்,
"BOC சதுக்கம்", இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 011 220 4264, 011 254 4310, 011 243 4786
மின்னஞ்சல்: procurement1@boc.lk

மேலதிக விபரங்களுக்கு Scan செய்யவும்

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை டெஸ்ட் தொடரில் இருந்து விலகினார் ஸ்டொக்ஸ்



ஹன்ட்ரட் கிரிக்கெட் தொடரின்போது இடது கால் தொடைப் பகுதியில் உபாதைக்கு உள்ளான இங்கிலாந்து டெஸ்ட் அணித் தலைவர் பென் ஸ்டொக்ஸ் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து விலகியுள்ளார்.

இதனையடுத்து எதிர்வரும் ஓகஸ்ட் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இலங்கைக்கு எதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடருக்கு உப தலைவர் ஒலி பொப் இங்கிலாந்து அணியின் தலைவராக செயற்படவுள்ளார்.

ஓல்ட் டிரபர்ட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (11) நடைபெற்ற மான்செஸ்டர் ஒரிஜினல் அணிக்கு எதிரான போட்டியில் நோதன் சுப்பர் சார்ஜஸ் அணிக்காக ஆடியபோதே 33 வயதான ஸ்டொக்ஸ் காயத்திற்கு உள்ளானார்.

இந்நிலையில் எதிர்வரும் ஒக்டோபர் 7 ஆம் திகதி மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடருக்கான இங்கிலாந்து அணியின் பாகிஸ்தான் சுற்றுப்பயணத்திற்கு முன்னர் உடல் தகுதியை பெற ஸ்டொக்ஸ் எதிர்பார்த்துள்ளார்.

ஏற்கனவே இடது முழங்கால் காயத்திற்காக சத்திர சிகிச்சை செய்துகொண்ட ஸ்டொக்ஸ் பந்து வீசுவதை தவிர்த்து வருகிறார்.

# பத்தும் முன்னேற்றம்



இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் சோபித்த இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் பத்தும் நிசங்க சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் துடுப்பாட்ட வீரர்களுக்கான ஒருநாள் தரவரிசையில் ஓர் இடம் முன்னேறி 8 ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

இலங்கை துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசையில் முன்னிலையில் இருக்கும் நிசங்க இந்தியாவுக்கு எதிரான தொடரில் 101 ஓட்டங்களை பெற்றார். கடந்த வாரம் முடிவுற்ற இந்தத் தொடரில் இலங்கை அணி 2–0 தொடரை கைப்பற்றியது. இந்தத் தொடரில் 103 ஓட்டங்களை பெற்ற குசல் மெண்டிஸ் ஐந்து இடங்கள் முன்னேறி 39 ஆவது இடத்தை பிடித்தார்.

தொடரில் இலங்கை சார்பில் 137 ஓட்டங்களை பெற்ற அவிஷ்க பெர்னாண்டோ 20 இடங்கள் ஏற்றம் கண்டு 68 ஆவது இடத்தில் உள்ளார்.

இதன்போது கடைசி போட்டியில் 5 விக்கெட்டுகளை வீழ்த்தி இலங்கை அணியின் வெற்றிக்கு உதவிய துனித் வெள்ளாலகே ஒருநாள் பந்துவீச்சாளர் தரவரிசையில் 17 இடங்கள் முன்னேறி 59 ஆவது இடத்தை பிடித்தார்.

# சம்பியனானது நியூ ஸ்டார்

**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**



தாண்டியடி சுப்பர் கிட் விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் 'அமரர் க. அருளானந்தம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண' கிரிக்கெட் தொடரில் அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

கடந்த ஒரு மாதகாலமாக நடைபெற்ற இந்தத் தொடரின் இறுதிப் போட்டி ஞாயிறன்று (11) நடைபெற்றது. இதில் அக்கரைப்பற்று ஹிஜ்ரா அணியை எதிர்கொண்ட நியூ ஸ்டார் 9 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது. தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக நியூ ஸ்டார் அணியின் சஹிரும், இறுதிப்போட்டியில் சிறந்த வீரராக அந்த அணியின் அஸ்லமும் தெரிவாகினர்.

# இலங்கைக்கு எதிரான தொடரை சமன் செய்தது அயர்லாந்து அணி



இலங்கைக்கு எதிரான இரண்டாவது டி20 போட்டியில் 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டிய அயர்லாந்து மகளிர் அணி இரண்டு போட்டிகளைக் கொண்ட தொரை 1–1 என சமன் செய்தது.

டப்லினில் நேற்று முன்தினம் (13) நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து கப்பி லுவிஸின் (119) சதத்தின் மூலம் 20 ஓவர்களுக்கும் 3 விக்கெட்டுகளை இழந்து 173 ஓட்டங்களை பெற்றது.

பதிலெடுத்தாடிய இலங்கை மகளிர் கடைசி வரை போராடியபோதும் 20 ஓவர்களுக்கும் 7 விக்கெட்டுகளை இழந்து 166 ஓட்டங்களையே எடுத்தது. ஆரம்ப வீராங்களை ஹர்ஷிதா செனவிரத்ன 44 பந்துகளில் 65 ஓட்டங்களை பெற்றதோடு கவிஷா டில்ஹாரி ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களை பெற்றார்.

அயர்லாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கை அணி அடுத்து அயர்லாந்துக்கு எதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடவுள்ளது. இதன் முதல் போட்டி பெல்பாஸ்டில் நாளை (16) நடைபெறவுள்ளது.

# செப். 1: சர்வதேச அரை மரதன் போட்டி கொழும்பில்



இந்திய கலாசார சங்கத்தின் ஏற்பட்டில் எதிர்வரும் செப்டெம்பர் 1ஆம் திகதி கொழும்பில் முதல்முறையாக சர்வதேச அரை மரதன் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

கொழும்பு, காலி முகத்திடலில் செப்டெம்பர் 1ஆம் திகதி காலை ஆரம்பித்து அந்த இடத்திலேயே போட்டியை நிறைவு செய்யும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 1400க்கும் அதிகமான போட்டியாளர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பில் அறிவிக்கும் ஊடக சந்திப்பு நேற்று முன்தினம் (13) கொழும்பில் நடைபெற்றது. இதன்மூலம் விளையாட்டு சுற்றுலாத் துறையில் இலங்கை மேலும் அங்கீகாரத்தை பெறும் என்று இந்திய கலாசார சங்கத்தின் தலைவர் அனிர்பான் பனர்ஜி குறிப்பிட்டார்.

மூன்று பிரிவுகளின் கீழ் நடைபெறும் இந்த போட்டிகளில் காலை 5.00 மணிக்கு அரை மரதன் (21 கி.மீ.) போட்டியும், காலை 5.30 இற்கு செலஞ்சர்ஸ் ரன் (10 கி.மீ.) போட்டியும், காலை 6.00 இற்கு பெமிலி ரன் (5 கி.மீ.) போட்டியும் நடைபெறவுள்ளன. இந்த ஓட்டப் போட்டிக்கு பின்னர் காலை உணவும் வழங்கப்படவுள்ளது.

# தாய்லாந்து பிரதமர் தவீசின் பதவி நீக்கம்



தாய்லாந்து பிரதமர் செட்டா தவீசின் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். தாய்லாந்து அரசியலமைப்பு நீதிமன்றம் நேற்று (14) இந்தத் தீர்ப்பை வழங்கியது.

கையூட்டுப் பெற்ற சந்தேகத்திற்காக 2008ஆம் ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பிச்சிட் சியூன்பன்னை தவீசின் கடந்த ஏப்ரல் மாதம் பிரதமர் அலுவலக அமைச்சராக நியமிக்கப்பட்டார். தாய்லாந்துச் சட்டப்படி குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள் அரசாங்கப் பொறுப்புகளுக்குத் தகுதி பெறமாட்டார்கள். எனவே தவீசின், தகுதியற்ற ஒருவரை அமைச்சரவை உறுப்பினராக நியமித்ததாகக் கூறப்படுகிறது. தாய்லாந்தில் கடந்த 16 ஆண்டில், நீதிமன்றம் தீர்ப்பளித்து பிரதமர் பதவியிலிருந்து ஒருவர் நீக்கப்படுவது இது நான்காவது முறை.

ஓராண்டுக்கும் குறைவான காலம் பிரதமர் பொறுப்பு வகித்த தவீசின் பதவியிலிருந்து நீக்கப்பட்டதால் பாராளுமன்றம் ஒன்றுகூடி புதிய பிரதமரைத் தெரிவுசெய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது.

# ஜப்பான் பிரதமர் பதவியை கைவிட கிஷிடா தீர்மானம்



ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா கட்சிக்கான தலைமைத்துவப் போட்டியில் கலந்துகொள்ளப்போவதில்லை என்று அறிவித்துள்ளார்.

கிஷிடாவின் மிதவாத ஜனநாயகக் கட்சி புதிய தலைவருக்கான தேர்தலை அடுத்த மாதம் நடத்தவுள்ளது. தமது முடிவு மக்களுக்குச் சிறந்ததாக இருக்கும் என நினைத்துப் போட்டியில் கலந்துகொள்ளப்போவதில்லை என்று 67 வயது கிஷிடா கூறியுள்ளார்.

கட்சித் தலைவர் பொறுப்பிலிருந்து விலகவிருக்கும் கிஷிடா, நாட்டின் பிரதமர் பதவியையும் கைவிடுவார். கிஷிடா பிரதமர் பொறுப்பேற்று சுமார் மூவாண்டாகிறது.

கருத்துக்கணிப்புகளும் அவருக்குச் சாதகமாக அமையவில்லை. நாட்டில் அதிகரிக்கும் விலைவாசி, அடுத்தடுத்து எழுந்த ஊழல் புகார்கள், அரசியல் சர்ச்சைகள் ஆகியவை அதற்குக் காரணங்களாகும்.

# பங்களாதேஷ் பதற்றத்தால் 10 பில். டொலர் பாதிப்பு



பங்களாதேஷ் அமைதியின்மையால் பத்து பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் மேலான பொருளாதாரப் பாதிப்புக்களை சந்தித்திருப்பதாக வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் பாவனையாளர் பொருட்கள் கைத்தொழில் துறை நூறு மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் மேலான பின்னடைவை எதிர்கொள்ள இந்த அமைதியின்மை வழிவகுத்துள்ளது என்றும் அந்த சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த அமைதியின்மையால் தகவல் தொழில்நுட்பத்துறையில் 400 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக மென்பொருள் மற்றும் தகவல் சேவைகளுக்கான பங்களாதேஷ் நிறுவனம் மதிப்பிட்டுள்ளது. இதில் பங்களாதேஷ் பொருளாதாரத்தின் அடித்தளமாக விளங்கும் தைத்த ஆடைகள் ஏற்றுமதி வருமானத்திலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# இஸ்ரேலின் தாக்குதலுக்கு இடையே ஹமாஸ் இன்றி போர் நிறுத்தப் பேச்சு



காசா போர் நிறுத்த பேச்சுவார்த்தையை இன்று (15) ஆரம்பிக்கத் திட்டமிட்டிருந்த போதும் அதில் பங்கேற்பதில்லை என்று ஹமாஸ் அமைப்பு குறிப்பிட்டுள்ளது. காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் நிலையிலேயே ஹமாஸ் இந்த முடிவை எடுத்துள்ளது.

போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிக்கும் நாடுகளான அமெரிக்கா, எகிப்து மற்றும் கட்டார் இன்று (15) பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க அழைப்பு விடுத்திருந்தது. இதற்கு தமது பிரதிநிதிகளை அனுப்ப இஸ்ரேல் இணங்கியது.

எனினும் இதில் தமது பிரதிநிதிகள் பங்கேற்க மாட்டார்கள் என்று லெபனானில் உள்ள ஹமாஸ் உறுப்பினர் அஹமது அப்துல் ஹாதி குறிப்பிட்டுள்ளார். போரை முழுமையாக முடிவுக்குக் கொண்டுவரும் உடன்படிக்கை ஒன்றை எட்டுவதில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆர்வம் காட்டாதது இதற்குக் காரணம் என்று ஊடகம் ஒன்றுக்கு அவர் குறிப்பிட்டுள்ளார்.

'போர் நிறுத்தத்திற்கு மாறாக அவர் போரை நீடிக்க விரும்புவதோடு, மேலும் பிராந்திய மட்டத்தில் அதை விரிவுபடுத்த விரும்புகிறார். அவர் எமது மக்களுக்கு எதிராக தனது ஆக்கிரமிப்பை தொடரவும் அவர்களுக்கு எதிராக மேலும் படுகொலைகளை செய்யவும் பேச்சுவார்த்தைகளை ஒரு கவசமாக பயன்படுத்தி வருகிறார்' என்று ஹாதி குறிப்பிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த மே மாதம் முன்வைத்த போர் நிறுத்த திட்டத்தின் அடிப்படையில் புதிய சுற்று பேச்சுகளை தொடர திட்டமிடப்பட்டுள்ளது. எனினும் இதில் இஸ்ரேல் புதிய நிபந்தனைகளை விதித்திருப்பதை ஹமாஸ் எதிர்த்து வருகிறது.

நான்கு மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் காசா போரை முடிவுக்குக் கொண்டு வரும் பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்து இழுபறி நீடித்து வருகிறது. காசா போரை முழுமையாக முடிவுக்குக் கொண்டுவருவதற்கு ஹமாஸ் வலியுறுத்துவதோடு தற்காலிக போர் நிறுத்தத்தை கோரும் இஸ்ரேல், ஹமாஸை முழுமையாக ஒழிக்கும் வரை போர் தொடரும் என்று கூறி வருகிறது.

எனினும் இன்றை பேச்சுவார்த்தை திட்டமிட்டபடி நடைபெறும் என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்பதற்கு ஹமாஸ் அமைப்பை கட்டார் சமாதானப்படுத்தும் என்று எதிர்பார்ப்பதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் காசாவின் மத்திய மற்றும் தெற்கின் நுஸைரத், மகாசி, கான் யூனிஸ் மற்றும் ரபா பகுதிகளில் இஸ்ரேல் நேற்றுக் காலை நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்நிலையில் கான் யூனிஸ் நகரில் மேலும் பல இடங்களில் இஸ்ரேல் புதிய வெளியேற்ற உத்தரவை பிறப்பித்துள்ளது.

மத்திய இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் ரொக்கட் குண்டுகளை வீசியதை அடுத்த இந்த உத்தரவு வந்துள்ளது. கடந்த பல மாதங்களில் முதல் முறையாக இஸ்ரேலின் டெல் அவிவ் நகரை இலக்கு வைத்து பலஸ்தீன போராளிகள் நேற்று முன்தினம் நீண்ட தூர ரொக்கெட் குண்டுகளை வீசியுள்ளனர்.

மறுபுறம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை நகரான தம்முனில் இஸ்ரேல் நேற்று நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் ஐந்து பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமாக வபா குறிப்பிட்டது. டுபாஸ் நகரில் இஸ்ரேல் நடத்திவரும் சுற்றிவளைப் பின்போது இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி காசாவில் போர் வெடித்தது தொடக்கம் மேற்குக் கரையில் பதற்றம் நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மறுபுறம் காசாவில் ஓர் ஆண்டை நெருங்கும் போரில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை தற்போது 40,000ஐ நெருங்கியுள்ளது.

# இஸ்ரேலுக்கு 20 பில். டொலர் ஆயுதங்களை விற்க ஒப்புதல்



இஸ்ரேலுக்கு 20 பில்லியன் டொலருக்கு மேற்பட்ட புதிய ஆயுதங்களை விற்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகம் கடந்த செவ்வாய்க்கிழமை ஒப்புதல் அளித்துள்ளது. காசாவில் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் இஸ்ரேலுக்கான ஆயுத விற்பனையை தடை செய்வதற்கு உரிமை குழுக்கள் அழுத்தம் கொடுத்து வரும் நிலையிலேயே இந்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி 18.82 பில்லியன் டொலர்களுக்கு இஸ்ரேலுக்கு 50 எப்15 போர் விமானங்களை விற்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

தவிர சுமார் 33,000 டாங்கி தோட்டாக்கள், 50,000 வரை மோட்டார் தோட்டாக்கள் மற்றும் புதிய சரக்கு வாகனங்களையும் இஸ்ரேல் வாங்கவுள்ளது.

## இஸ்ரேலின் வான் தாக்குதல்:

# தந்தை பிறப்புச் சான்றிதழை பெறச் சென்றபோது இரட்டை குழந்தை பலி



காசாவில் புதிதாக பிறந்த இரட்டை குழந்தைகளுக்கு உள்ளூர் அரச அலுவலகத்தில் தந்தை பிறப்புச் சான்றிதழைப் பெற சென்றிருந்தபோது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் அந்த குழந்தைகள் மற்றும் தாய் ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர்.

பிறந்து வெறும் நான்கு நாட்களேயான அஸர் என்ற ஆண் குழந்தை மற்றும் ஐசல் என்று பெண் குழந்தைக்காக அவர்களின் தந்தை முஹமது அபூ கும்சான் பிறப்புச் சன்றிதழ்களை பெறச் சென்றுள்ளார். மத்திய காசாவின் டெயிர் அல் பாலாஹ்வில் கடந்த செவ்வாயன்று அவர் செல்லும் வழியில் அண்டை வீட்டார் அவரை தொலைபேசியில் அழைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது பற்றி குறிப்பிட்டுள்ளனர்.

குழந்தை பிறந்த மகிழ்ச்சியை கொண்டாடும் முன்னரே இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தாக்குதலில் மனைவி ஜுமான அரபாவுடன் அவரது தாயும் கொல்லப்பட்டுள்ளார்.

இந்தத் தம்பதி வடக்கு காசாவில் இருந்து இடம்பெயர்ந்து டெயிர் அல் பலாஹ்வில் அடைக்கலம் பெற்றுள்ளார். இஸ்ரேல் இங்கு நடத்திய தாக்குதல்களில் 23 பேர் வரை கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

காசாவில் போர் வெடித்தது தொடக்கம் 115 புதிதாக பிறந்த சிசுக்கள் கொல்லப்பட்டிருப்பதாக காசா சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஓகஸ்ட் மாதம் 15ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# கண்டி மாநகர சபை – பெறுகை அறிவித்தல்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் கண்டி மாநகர சபைக்குச் சொந்தமான கடை அறைகளில் விற்பனை செய்யும் உரிமையை குத்தகைக்கு விடுவதற்காக 2024.09.03 மு.ப. 9.45 வரை பொறியிடப்பட்ட பெறுகை விண்ணப்பங்கள் என்னால் ஏற்கப்படும்.

பெறுகை விண்ணப்பங்கள் 2024.09.02 பி.ப. 3.00 வரை விநியோகிக்கப்படுவதுடன், 2024.09.03 மு.ப. 10.00 இற்கு திறக்கப்படும். பொறியிடப்பட்ட விண்ணப்பங்கள் மாநகர ஆணையாளர், மாநகர சபை கண்டி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கலாம். (விண்ணப்பங்கள் உள்ளிடும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “கொஹாகொட இல. 02 கடை அறைக்காக விலைமனுக்களை சமர்ப்பித்தல்” என்று குறிப்பிடுதல் வேண்டும்)

மேலதிக விபரங்களை கண்டி மாநகர சபையின் மாநகர கணக்காளர் (வருமானம்) இடமிருந்து அலுவலக நேரங்களில் நேரில் அல்லது 081-2227395 தொ.பே இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம். (பெறுகை ஆவணங்களை அலுவலக நேரங்களில் பரீட்சித்து பார்க்கலாம்)

**அட்டவணை**

| சந்தை | கடை இலக்கம் | விற்பனை | மீளளிக்கப்படாத கேள்வி படிவக் கட்டணம் (வரி இன்றி) ரூ. | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை ரூ. | குறைந்தபட்ச கேள்வி (வரியின்றி) ரூ | மாதாந்த கடை வாடகை (அரச வரியுடன்) | கால எல்லை |
|---|---|---|---|---|---|---|---|
| கொஹாகொட வீதி தேசிய சந்தை | 02 | மளிகை பொருட்கள் விற்பனை | 2,000.00 | 50,000.00 | 155,000.00 | 6750.00 | 05 வருடங்கள் |

- வழங்கப்படும் கேள்வி தொகைக்கு மேலதிகமாக அரசிற்கு செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரியும் அறவிடப்படும்.
- மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகைக்காக கண்டி மாநகர சபையின் காசாளர் பிரிவிற்கு காசு செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளல் வேண்டும். அப்பற்றுச்சீட்டு கேள்வி ஆவணங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட நபர்கள் / நிறுவனங்களால் கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

**2024.08.12ம் திகதி**
**கண்டி மாநகர சபை அலுவலகத்தில்**

**ஏ.எச்.எம் இந்திகா குமாரி அபேசிங்ஹ**
**கண்டி மாநகர ஆணையாளர்**

# பெறுகை அறிவித்தல்

## மத்திய மாகாண கல்வி திணைக்களம் - கண்டி

## 2024 ஆம் ஆண்டின் அழகியல் உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்களை வழங்கல் மற்றும் 6 தொடக்கம் 11 ஆம் தரம் வரை இரண்டாம் தவணைப் பரீட்சையின் வினாத் தாள் மற்றும் விடைத் தாள் அச்சிட்டு வழங்கல்

மத்திய மாகாணத்தின் பாடசாலைகளுக்காக விளையாட்டு உபகரணங்கள், அழகியல் உபகரணங்கள் வழங்கல் மற்றும் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான இரண்டாம் தவணை பரீட்சைக்கான சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி கேள்வித் தாள் மற்றும் பதில் தாள்களை அச்சிட்டு வழங்குவதற்கு தகுதியுடைய வழங்குநர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கோருவதற்கு மத்திய மாகாண கல்வி திணைக்கள பெறுகைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**02. விபரம் பின்வருமாறு**

**பொதி இலக்கம் 01 - அழகியல் உபகரணங்கள் (விலைமனு இலக்கம் CP/EDU/F/08/SBLEG/2024/01) விலைமனு பிணை ரூபா 150,000.00**

| உருப்படி இலக்கம் | உபகரணம் | அளவு | உருப்படி இலக்கம் | உபகரணம் | அளவு | உருப்படி இலக்கம் | உபகரணம் | அளவு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செர்பினா (சபாரி) | 50 | 14 | பன்தேரு | 30 | 27 | டபள் கொங்கோ | 1 |
| 2 | கிட்டார் | 30 | 15 | கெட்டபெர | 30 | 28 | ஷேகர் | 1 |
| 3 | புல்லாங்குழல் | 60 | 16 | தெவொல் பெர | 15 | 29 | வைம்ஸ் | 3 |
| 4 | தபேலா | 30 | 17 | தம்மட்டம் | 15 | 30 | சித்திரங்களை தாங்கும் கருவி | 147 |
| 5 | சிதார் | 3 | 18 | தவுல் கடிப்பு உடன் | 15 | 31 | மேல் உடல் படங்கள் (பெண்கள்) | 37 |
| 6 | வயலின் | 30 | 19 | கை ரபன் | 30 | 32 | உயிரொலி அமைப்பு | 3 |
| 7 | க்ளோகன்ஸ்பீல் | 2 | 20 | உடுக்கை | 14 | 33 | செக்சபோன் எல்டோ | 3 |
| 8 | மென்டொலீன் | 10 | 21 | தாளம் | 15 | 34 | சதுரமுகி | 16 |
| 9 | டோல்கி | 2 | 22 | சிம்பல் | 9 | 35 | கன உரு | 16 |
| 10 | மத்தளம் | 4 | 23 | ட்ரம்பட் | 5 | 36 | வோட்டர் கலர் | 320 |
| 11 | கஜோன் | 11 | 24 | ட்ரோவின் போட் | 100 | 37 | தூரிகை தொகுதி | 11 |
| 12 | எஸ்ராஜ் | 15 | 25 | மிருதங்கம் | 9 | 38 | பெஸ்டல் பெட்டி | 100 |
| 13 | ஒகன் | 3 | 26 | தூரிகை தொகுதி | 1350 | 39 | லெஜர் பேப்பர் | 300 |

**பொதி இலக்கம் 02 - விளையாட்டு உபகரணங்கள் (விலைமனு இலக்கம் CP/EDU/F/08/SBLEG/2024/02) விலைமனு பிணை ரூபா 500,000.00**

| உருப்படி இலக்கம் | உபகரணம் | அளவு | உருப்படி இலக்கம் | உபகரணம் | அளவு | உருப்படி இலக்கம் | உபகரணம் | அளவு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | உயரம் பாய்தல் மெத்தை தொகுதி | 20 | 16 | வலைப்பந்து | 200 | 31 | குண்டு 5Kg | 30 |
| 2 | உயரம் பாய்தல் சோடி கம்பங்கள் | 20 | 17 | வலைப்பந்து சோடி கம்பங்கள் | 30 | 32 | குண்டு 6Kg | 30 |
| 3 | உயரம் பாய்தல் குறுக்கு தடி | 20 | 18 | கால்பந்து | 100 | 33 | குண்டு 7.2Kg | 30 |
| 4 | ஈட்டி 500g | 60 | 19 | Pause clock 10 | 80 | 34 | மெடிசின் போல் 1Kg | 40 |
| 5 | ஈட்டி 600g | 60 | 20 | Pause clock 100 | 80 | 35 | மெடிசின் போல் 2Kg | 40 |
| 6 | ஈட்டி 700g | 60 | 21 | கபடி மெத்தை தொகுதி - ததாமி | 2 | 36 | மெடிசின் போல் 4Kg | 40 |
| 7 | ஈட்டி 800g | 30 | 22 | கரத்தே விளையாட்டுக்கான ததாமி - 100 தொகுதி | 2 | 37 | ஸ்டார்டின் புளொக் | 30 |
| 8 | பரிதிவட்டம் 1 Kg | 60 | 23 | ஜூடோ மெத்தை | 120 | 38 | வேட் லிஸ்டின் - தொகுதி | 20 |
| 9 | பரிதிவட்டம் 1.5 Kg | 60 | 24 | ஜிம்னாஸ்டிக் மெத்தை | 60 | 39 | கோள் | 3 |
| 10 | பரிதிவட்டம் 1.75 Kg | 60 | 25 | மல்யுத்த மெத்தை தொகுதி | 120 | 40 | போல்டின் மெத்தை | 200 |
| 11 | பரிதிவட்டம் 2 Kg | 15 | 26 | ஹொக்கி துடுப்பு | 120 | 41 | குத்துச்சண்டை கையுறை | 30 |
| 12 | விக்கெட் | 300 | 27 | கூடைப்பந்து | 40 | 42 | ரகர் பந்து அளவு 03 | 20 |
| 13 | கரப்பந்து | 200 | 28 | கைப் பந்து | 40 | 43 | ரகர் பந்து அளவு 04 | 20 |
| 14 | கரப்பந்து சோடி கம்பங்கள் | 30 | 29 | குண்டு 3Kg | 30 | 44 | ரகர் பந்து அளவு 05 | 20 |
| 15 | கரப்பந்து வலை | 30 | 30 | குண்டு 4Kg | 30 | | | |

**பொதி இலக்கம் 03 - 6 தொடக்கம் 11 ஆம் தரம் வரை இரண்டாம் தவணைப் பரீட்சையின் வினாத் தாள் மற்றும் விடைத் தாள் அச்சிட்டு வழங்கல் (விலைமனு இலக்கம் CP/EDU/F/08/2nd Tearm-2024) விலைமனு பிணை ரூபா 500,000.00**

| பொதி அடிப்படையில் இலக்கம் | தரம் | ஒவ்வொரு மொழி ஊடகத்திற்கும் தேவையான வினாத் தாள் தொகுதி எண்ணிக்கை (தோராயமானது) | | | விலைமனு பிணை ரூபா |
|---|---|---|---|---|---|
| 3.1 | 06 | 26788 | 15222 | 4376 | 270,000.00 |
| | 07 | 26158 | 15061 | 3849 | |
| | 08 | 26389 | 14657 | 3238 | |
| | 09 | 26179 | 14075 | 2982 | |
| 3.2 | 10 | 26530 | 13840 | 2971 | 225,000.00 |
| | 11 | 27788 | 13251 | 2394 | |

03. பொதி இலக்கம் 01 இல் மற்றும் 03 இல் அனைத்து உருப்படிகளுக்கும் அல்லது வெவ்வேறு உருப்படிகளுக்கும் விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும். பொதி இலக்கம் 03 இல் ஒரு உப பொதி அல்லது இரு உப பொதிகளுக்கும் வெவ்வேறாக விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முடியும். விலைமனுக்களை சமர்ப்பிக்கும்போது பொதி ஒன்றில் உள்ள அனைத்து தரம் மற்றும் அனைத்து மொழி ஊடகங்களுக்கும் விலைமனுக்களை கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு பொதியும் வெவ்வேறாக மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும். விலைமனுதாரரினால் வினாத் தாள்களை அச்சிட்டு ஒவ்வொரு பாடத்திற்கு அமைய பொதியிட்டு பாடசாலைகளாக பிரித்து மத்திய மாகாணத்தின் கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் உள்ள 15 வலய கல்வி காரியாலயங்களுக்கும் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

04. தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்த விலைமனு கோரல் தேசிய போட்டிரீதியான விலைமனுக் கோரல் நடைமுறைக்கு அமைய மேற்கொள்ளப்படும்.

05. விலைமனு ஆவணங்களை 2024.08.16 ஆம் திகதி தொடக்கம் 2024.09.06 ஆம் திகதி வரை வாரத்தின் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பிற்பகல் 3.00 வரை மத்திய மாகாண கல்வி திணைக்களத்தில் பரீட்சித்து பார்க்க முடியும்.

06. திணைக்கள மேலதிக மாகாண கல்வி பணிப்பாளருக்கு (நிதி) எழுத்துமூல கோரிக்கை ஒன்றை சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும். இதன்போது மத்திய மாகாண கல்வி பணிப்பாளர் பெயரில் இந்தத் திணைக்களத்தில் சிறாப்பருக்கு பொதி இலக்கம் 1 மற்றும் 3 இற்காக வெவ்வேறாக மீளளிக்கப்படாத ரூபா 5,000/- விலைமனு ஆவணக் கட்டணம் மற்றும் பொதி இலக்கம் 2 இற்காக மீளளிக்கப்படாத ரூபா 12,500/- விலைமனு ஆவணக் கட்டணத்தை ரொக்கப்பணமாக செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை மத்திய மாகாண கல்வி திணைக்கள பெறுகை பிரிவுக்கு சமர்ப்பித்த பின் விலைமனு நிபந்தனை மற்றும் விபரக்குறிப்பு அடங்கிய விலைமனு படிவத்தை 2024.08.16 ஆம் திகதி தொடக்கம் 2024.09.06 ஆம் திகதி வரை வரத்தின் அலுவலக நாட்களில் முற்பகல் 9.00 தொடக்கம் பிற்பகல் 3.00 வரை அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

07. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024.08.23 ஆம் திகதி மு.ப. 10.00 இற்கு மத்திய மாகாண கல்வி திணைக்கள கூட்ட அறையில் நடைபெறும்.

08. பூர்த்தி செய்யப்பட்டு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனு ஆவணங்களை இட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “ஒவ்வொரு பொதியினதும் பெயர் மற்றும் பொதி இலக்கத்தை” சரியாக குறிப்பிட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2024.09.09 ஆம் திகதி மு.ப. 10.00க்கு அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது கைகளால் கொண்டுவந்து கணக்குப் பிரிவில் அதற்காக வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்பு பெட்டிக்கு இடுதல் வேண்டும். ஒவ்வொரு பொதிக்காகவும் வெவ்வேறாக விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும். தாமதித்து கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

09. விலைமனுக்களை திறப்பது 2024.09.09 ஆம் திகதி மு.ப. 10.00 க்கு மத்திய மாகாண கல்வி திணைக்களத்தின் கூட்ட அறையில் இடம்பெறும். விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரருக்கு அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.

10. விலைமனுவுடன் மேல் குறிப்பிடப்பட்ட பெறுமதியைக் கொண்ட விலைமனு பிணை ஒன்றை இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்டு சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

11. மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இலக்கம் 0812-203774 மூலம் மத்திய மாகாண கல்வி திணைக்களத்தின் பிரதி கல்வி பணிப்பாளரை (நிதி) அழையுங்கள்.

**எம்.ஜே. அமரசிறி பியதாச**
**மத்திய மாகாண கல்வி பணிப்பாளர்**
**மத்திய மாகாண கல்வி திணைக்களம்**
**கண்டி.**
**2024.08.15**

**தொலைபேசி இலக்கம் 0812-203774**
**தொலைநகல் இலக்கம் 0812-223343/ 0812-203771**
**மின்னஞ்சல் cpceduacc@gmail.com**

# இலங்கை மக்களிடம் மன்னிப்புக் கோரல்

